# விசுவாச வீரனாகிய

# யெப்தா

திருமறை அறிஞர்

Rev. Dr. A. கிறிஸ்டோபர் M.A., D.D.,



# விசுவாச வீரனாகிய

# யெப்தா

ஆசிரியர்
திருமறை அறிஞர்
**Rev. Dr.A. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
நேருவீதி, சூரம்பட்டி,
ஈரோடு - ௯. தென் இந்தியா.

RE - EDITION - Jan - 2011
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO WINNAGA APPAM
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 32

**FOR DETAILS CONTACT**

**WINNAGA APPAM**
**No.4/2, Nehru Street, Surampatti,**
**Erode - 638 009. S. India.**
**Phone : (0424) 2277280**

# அணிந்துரை

**திருமறைப் பெரியார்**
**Rev. Dr. யோபு ஞானப்பிரகாசம்**
தலைவர் & ஸ்தாபகர் இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோவை 18, தென் இந்தியா.

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள். திருமறை அறிஞர். அ. கிறிஸ்டோபர் அவர்கள் எழுதியுள்ள விசுவாச வீரனாகிய யெப்தா என்ற நூலுக்காக கர்த்தரை துதிக்கிறேன்.

குறைந்த குறிப்புகள் வேதத்தில் உள்ள பகுதிகளை எடுத்து அதை தனக்கே உரியமுறையில் விளக்கி அபூர்வ கருத்துக்களை அள்ளிக் கொடுப்பதில் இவர் கைதேர்ந்தவர்.

இவரது முந்தின புத்தகங்களை வாசித்து அதிசயித்து இருக்கிறேன். இப்போதும் யெப்தா என்னும் புருஷனை புதிய கோணத்தில் படம் பிடித்து மிக நேர்த்தியதக விளக்கியிருக்கிறார்.

சில இடங்களில் புனல் போல அமைதியாய் பயனளிக்கிறது சில இடங்களில் அனல்போல் கொதிக்கிறது. கிறிஸ்தவ உலகத்தில் புரையோடிப் போயுள்ள சில காரியங்களை வெளிப்படையாக கண்டித்து எழுதியிருப்பது போற்றுதலுக்குரியது.

சபையை எப்படியும் வருகைக்கு ஆயத்தப்படுத்துவதிலே குறியாக இருக்கிற இவரது எண்ணம் இந்த நூலிலும் வெளிப்படுகிறது.

வாசகர்கள் பக்கத்திற்கு பக்கம் பெலனையும், பலனையும் அடைவார்கள் என்பது உண்மை.

எங்கள் உடன் ஊழியரும், ஈரோடு மாவட்ட மத்திய போதகருமாகிய பாஸ்டர் கிறிஸ்டோபர் இன்னும் அநேக நூல்களை வெளியிட சுகத்தையும் ஞானத்தையும் தேவன் அருள வாழ்த்துகிறேன்.

ஆமென்



# என்னுரை

என் இனிய வாசகர்களுக்கு அன்பு வாழ்த்துக்கள்

தமிழில் இது எனது 32வது படைப்பு. இதனை ஜெபத்தோடும் எதிர்பார்ப்போடும் உங்கள் கைகளில் தவழ விடுகிறேன்.

வேதம் என்னும் மிகப்பெரிய வயல் வெளியில் அறுபத்தியாறு ஆகமங்கள் என்னும் பாத்திகள் இருக்கிறது. அந்த ஒவ்வொரு பாத்திகளிலும் எண்ணற்ற பயிர்கள் அந்த பயிர்கள் ஒவ்வொன்றிலும் எண்ணற்ற கதிர்கள்

அந்த பெரிய வயல்வெளியில் நான் யெப்தாவை தனியாக கொய்து பாடம் செய்து படைத்து இருக்கிறேன்.

இந்நூலில் சொல்லப்பட்டவைகள் உங்களை உயிர்ப்பிக்கும். உற்சாகமூட்டும் உந்தித்தள்ளும் என்று நம்புகிறேன். மனிதர்களால் தள்ளப்பட்ட, விரட்டப்பட்ட விரக்தியாகியுள்ள ஆத்துமாக்கள் வீறு கொண்டு எழும்பச் செய்யும் என்று உளமாற நம்புகிறேன்.

உங்கள் கண்கள் தெளிவடைய

உங்கள் உள்ளம் களிப்படைய

தூய ஆவியானவர் இந்தநூல் மூலம் கிரியை செய்வாராக!

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
**அ. கிறிஸ்டோபர்**

## ஆசிரியரின் நூல்கள்

1. வளமான பிரசங்கி
2. ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது?
3. என் தாசனாகிய யோபு
4. இயேசு கிறிஸ்துவும் அந்திக்கிறிஸ்துவும்
5. ஆத்தும ஆதாயம் செய்வது எப்படி?
6. இயேசு வந்த வீட்டில் !
7. ஆசாரியனின் உதடுகள் (நிறுத்தப்பட்டது)
8. காலங்களும் யுகங்களும்
9. பயனுள்ள பிரசங்கக் குறிப்புகள்
10. இயேசுவின் வருகை எங்கே? எப்போது? எப்படி?
11. தேனும் பாலும்
12. தானியேல் தீர்க்கதரிசியும், தீர்க்கத் தரிசனமும்
13. பரிசுத்த ஆவியும், பற்பல பாஷையும்
14. திருச்சபையைக் கட்டி எழுப்புவது எப்படி?
15. சத்தியமாவது என்ன?
16. ஆக்கில்லா பிரிஸ்கில்லாள்
17. எஸ்தர்
18. என் தாசனாகிய தாவீது
19. மூன்று முற்பிதாக்கள்
20. நெகேமியா
21. நான் உன்னை விடுவிப்பேன்
22. பேயோரின் குமரனாகிய பிலேயம்
23. அப்போஸதலானிகய பவுல்
24. இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை
25. கோதுமை மணியாகிய ஸ்தேவான்
26. நீங்கள் இராஜரீக ஆசாரியர்கள்
27. என் தாசனாகிய மோசே



28. குணசாலியான ரூத்
29. மகிமையின் கூடாரமும் மறைந்துள்ள சத்தியங்களும்
30. முதலாம் உயிர்த்தெழுதலும் ஆயிரமாண்டு அரசாட்சியும்
31. நூனின் குமாரனாகிய யோசுவா
32. விசுவாச வீரனாகிய யெப்தா
33. எக்ளீசியா
34. சமயத்திற்கேற்ற பிரசங்க குறிப்புகள்
35. சிங்கத்தை கிழித்த சிம்சோன்
36. அன்புக்குரிய அப்போஸ்தலர்
37. எலியா
38. தெளிவூட்டும் தேன் துளிகள்
39. முற்றிலும் ஜெயம் பெறுவோம்
40. பிரசங்கிப்போர்க்கு என் ஆலோசனைகள்
41. நீங்கள் தாழ்ச்சி அடைவதில்லை
42. தீர்க்கதரிசியாகிய எலிசா
43. பராக்கிரமசாலியாகிய கிதியோன்
44. தெய்வீக பிரசங்க குறிப்புகள்
45. அனல் மூட்டும் பிரசங்க குறிப்புகள்
46. ஆவியானவரும் அப்போஸ்தல நட படிகளும்
47. ஆத்தும ஆதாயகருக்கு என் ஆலோசனைகள்
48. பொருத்தமான பொற்பழங்கள்
49. கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோன்
50. பிரியமுள்ள பிலேமோன்
51. உத்தமனாகிய எஸ்றா
52. திருமறைக்கு ஓர் அறிமுகம்

## படைக்கிறேன்

அநாதி சிநேகத்தால் அழைத்து !

ஆயன் ஊழியத்தை கொடுத்து !

இமைபோல் என்னைக் காத்து !

ஈவுகள் அருள்பவரே ஸ்தோத்திரம் !

உலகம் முழுவதும் சென்றிட !

ஊழியத்தில் அசையா நின்றிட !

எங்கும் வெற்றி பெற்றிட !

ஏற்றங்கள் அருள்பவரே ஸ்தோத்திரம் !

ஐங்காயத்தால் என்னை காக்கின்றீர் !

ஒளிப்பிடத்து சதிகளை தகர்க்கின்றீர் !

ஓநாய்களின் சதிகளை தகர்க்கின்றீர் !

ஔஷதங்கள் அருளுகின்றீர் ஸ்தோத்திரம் !

இஃதிணை படைக்கிறேன் ஏற்றிடுவீர் !

இகத்திற்கு ஆசீராய் மாற்றிடுவீர் !

இவண்

**அ. கிறிஸ்டோபர்**



## பொருளடக்கம்

**அதிகாரம்**


1. யெப்தா – ஓர் அறிமுகம்
2. கர்த்தருக்குப் பிரியமானவன்
3. கர்த்தருக்குள் நம்பிக்கை
4. கர்த்தரிடம் சொன்னான்
5. கர்த்தருக்குப் பொருத்தனை
6. கர்த்தரின் ஆவியானவர்
7. தகப்பனுக்குத் தப்பாத பிள்ளை

# 1

# யெப்தா ஓர் அறிமுகம்

என் இனிய வாசகர்களுக்கு அன்பரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த முப்பத்திரண்டாவது படைப்பை ஜெபத்துடன் உங்கள் கைகளில் சமர்ப்பிக்கிறேன்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வழக்கமான வேத வாசிப்பின் போது எபிரேயர் 11ஆவது அதிகாரத்தை வாசித்துக் கொண்டிருந்தேன். அந்த அதிகாரம் முழுவதும் விசுவாச வீரர்களின் பட்டியலாய் அமைந்திருந்தது. முதல் பெற்றோருக்கு பிறந்த ஆபேல் துவங்கி பல முற்பிதாக்களின் விசுவாச செயல்பாடுகள் வெகு அழகாக எழுதப்பட்டிருக்கிறது.

ராகாப் என்னும் வேசியின் பெயர் கூட அந்தப் பட்டியலில் இருந்தது. இன்னும் சிலரின் பெயர்களைத் தேடினேன். தேவாலயத்தை கட்டின சாலமோன் பெயரைத் தேடினேன் இல்லை. எனக்கு மிகவும் பிரியமான தாசனாகிய யோபுவின் பெயரைத் தேடினேன் காணவில்லை. இப்படி பல முக்கிய பெயர்கள் விடுபட்டு போயிருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்ற எனக்கு மேலும் ஆச்சரியம் உண்டாயிற்று.

எபிரேயர் 11:32-ல் விசுவாச வீரர்களின் பட்டியலில் யெப்தா என்ற பெயர் என் கண்ணில்பட்டது அஹா! இது என்ன ஆச்சரியம் யெப்தா ஒரு விசுவாச வீரனா? ஆவியானவர் அவன் பெயரை முக்கியப்படுத்தி கூறியிருக்கிறாரே அப்படியானால்



இவனைக் குறித்து இன்னும் தேவ சமூகத்தில் சற்று தியானிக்க வேண்டுமென்ற அவா எனக்குள் பெருகிற்று. அதன் விளைவே இந்த விசுவாச வீரனாகிய யெப்தா புஸ்தகம்.

இந்த அதிகாரத்தில் சில முன்னோட்டமான காரியங்களை எழுதிய பின்னர் மற்ற அதிகாரங்களில் யெப்தாவின் குணாதிசயங்களை முன் வைத்து சில காரியங்களை எழுத விரும்புகிறேன்.

வேத புத்தகத்திலுள்ள 66 ஆகமங்களில் பல பொது பெயர்களிலும் சில தனி பெயர்களையும் தலைப்பாக கொண்டு உள்ளன. தனிப்பட்ட நபர்களின் பெயர்களில் எழுதப்பட்டுள்ள புத்தகங்கள், ஒன்று அந்த மனிதரால் எழுதப்பட்டிருக்கும் அல்லது அந்த மனிதரைப் பற்றி எழுதப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டாக நெகேமியா, எஸ்றா, யோபு, ஏசாயா, எரேமியா போன்றவை. ஆனால் மற்றுமொருவகை புத்தகங்கள் உண்டு அதில் ஒரு காலகட்டத்தில் தொடர்ந்து வாழ்ந்த மக்களின் சரித்திரத்தை நமக்கு வரிசையாக தந்து அவைகளில் தேவனின் செயல்பாட்டை விவரிக்கின்றன. இந்த வகையில் நியாயாதிபதிகள், சாமுவேல், இராஜாக்களின் புஸ்தகங்கள், நாளாகம புஸ்தகங்கள் அடங்கும்.

இதில் நியாயாதிபதிகள் புஸ்தகத்தில், யோசுவாவிற்கு பின் துவங்கி சவுல் இராஜ்ஜிய பாரம் ஏற்பதற்கு முன்புள்ள கால கட்டங்களைப் பற்றியும் மற்ற ஆகமத் தொகுப்புகளில் அரசர்களின் வாழ்க்கைகளையும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

நியாயாதிபதிகளை கர்த்தர் ஏன் ஏற்படுத்தினார் என்பதை நாம் கண்டறிதல் வேண்டும். நியாதிபதிகள் கடைசி அதிகாரத்திலுள்ள கடைசி வசனத்தை வாசித்தால் சில காரியங்களை கண்டு கொள்ள முடியும்.

அந்நாட்களில் இஸ்ரவேலில் (ராஜா), தலைவன் இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்கு சரியான படி செய்து

வந்தான். இந்த வசனத்தின் பொருள் என்ன தெரியுமா? தலைவன் என்ற ஒருவன் இல்லாத கால கட்டத்தில் இஸ்ரவேல் புத்திரர் சரியானபடி அல்ல, அவரவர் இஷ்டப்படி நடந்தனர் என்பதே.

இதைக் குறித்து சற்று விளக்கமாக நியாயாதிபதிகளின் புஸ்தகம் இரண்டாம் அதிகாரம் பதினோறாம் வசனத்திலிருந்து பத்தொன்பதாம் வசனம் வரை பரிசுத்த ஆவியானவர் தெளிவாக எழுதி வைத்துள்ளார்.

- கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள்.
- சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களை பின்பற்றினார்கள்.
- கர்த்தருக்கு கோபமூட்டினார்கள்.
- கர்த்தரை விட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள்.

இவர்கள் இப்படி செய்தபடியால் தேவன்

1. கொள்ளைக் காரர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்.
2. அவர்கள் பகைஞரின் கையில் ஒப்புக் கொடுத்தார்.
3. கர்த்தரின் கை தீமைக் கென்றே அவர்களுக்கு விரோதமாய் இருந்தது.
4. மிகவும் நெருக்கப்பட்டார்கள்.

இப்படி இருந்தாலும் தேவன் அவர்களுக்கு மனம் இரங்கி நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணினார். அவர்கள் இவர்களை எதிரிகளிடமிருந்து இரட்சித்தார்கள்.

இந்த அதிகாரம் முழுவதும் இஸ்ரவேலரின் சுபாவம் எப்படிப்பட்டதாய் இருந்தது என்பதை ஆவியானவர் வெளிப்படையாக எழுதியுள்ளார்.



நியாயாதிபதிகள் இருந்தால் இவர்கள் நல்லவர்கள்; நியாயாதிபதிகள் இறந்தால் இவர்கள் பொல்லாதவர்கள். ஆனால் தேவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார். இங்கே ஒரு காரியத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நமக்கு ஒரு ஆவிக்குரிய தலைவன் அவசியம். இது தேவனின் ஒழுங்கு.

எங்கே தலைவன் இல்லையோ? எவர் தலைவனை ஏற்றுக் கொள்வது இல்லையோ! அங்கே எல்லாமே தலைகீழாகத் தான் நடக்கும்.

இஸ்ரவேலில் புருஷர் மாத்திரம் ஆறு இலட்சம் பேர் இருந்தாலும் அவர்களை முறைபடுத்தி முன் நடத்த தேவன் மோசேயை ஏற்படுத்தினார். அதன்பின் யோசுவா. அதன் பின் நியாயாதிபதிகள் அதன் பின் அரசர்கள். இது தேவனின் திட்டம்.

இந்த ஒழுங்கு புதிய ஏற்பாட்டு சபைக்கும் உண்டு. சபைக்கு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்ற ஊழியர்களை தேவன் தந்துள்ளார். சபையில் ஆளுகையை தேவன் தாமே ஏற்படுத்தியுள்ளார் என்பதை மறந்து விடக்கூடாது.

இந்த ஆளுகையை ஏற்றுக் கொள்ளாமல் தங்களைத் தாங்களே நடத்திக் கொள்ள எங்கே எவர் நினைக்கிறார்களோ அங்கே தாறுமாறும், பின் மாற்றமும் தானாய் குடிவந்து விடும்.

நான் தேவனிடத்தில் பெற்றுக் கொண்டதை தைரியமாக எழுதக் கடமைபட்டுள்ளேன். சில இடங்களில் சிலர் சபையில் போதகரை துரத்திவிட்டு தாங்களே சபை நடத்துவதும், அல்லது போதகரை விட்டு பிரிந்த பத்து விசுவாசிகள் ஓரிடத்தில் கூடி துதித்து ஆராதிப்பதும் கர்த்தரை கோபப்படுத்தும் காரியம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிரிந்து போய் கூட்டம் நடத்துகிற இடத்தில் கொஞ்சம் எழுப்புதல் கூடியது போல தெரியும். நாங்க இப்பொழுதுதான்

வளர்கிறோம் என்ற நினைப்புக் கூட சில வேளையில் வரலாம். அதன் இரகசியம் என்ன தெரியுமா? இரண்டு காரியங்கள் அதற்குண்டு அதை கவனியுங்கள்.

முதலாவது, பிரிந்த பின்பு நீங்கள் நிற்கிறவர்கள் என்று மற்றவர்களுக்கு காட்டிக் கொள்ள விரும்பி அதே நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கிறீர்கள் என்பதை நன்றாய் சிந்தியுங்கள். இப்போது செலவழிக்கிற நேரத்தையும் பணத்தையும் உங்கள் ஆவிக்குரிய தலைமையின் கீழ் செலவு செய்து இருந்தால் இப்போதைவிட அப்போதே பன்மடங்கு வளர்ந்திருப்பீர்கள்.

இரண்டாவது, மேலும் நீங்கள் வழி விலகாமல் மீண்டும் அதே நிலைக்கு திரும்ப வேண்டும் என்பதற்காக ஆவியானவர் உங்களை அதிகம் நிரப்புகிறார். அதை நீங்கள் தவறாக புரிந்து கொண்டு நமது செயலுக்கு அங்கீகாரம் வழங்குகிறார் என்று எண்ணுகிறீர்கள்.

யோசுவாவிற்கு பிறகு இஸ்ரவேலை நடத்தும்படி நியாயம் விசாரிக்கும்படி தேவன் அனுப்பிய நியாயாதிபதிகளில் யெப்தா பத்தாவது நியாயாதிபதியாவார். இஸ்ரவேலர்க்கு தேவன் நியாயாதிபதிகளை ஏற்படுத்தியபோது ஒரே கோத்திரத்திலிருந்து அனுப்பாமல் வெவ்வேறு கோத்திரத்திலிருந்து ஏற்படுத்தினார்.

ஆம் தலைமைத்துவம் என்பது வாழையடி வாழையாக வருவதற்கு வழிவகுக்கப்பட்ட குத்தகை முறையல்ல, அது தகுதி உள்ளவர்களுக்கு தரப்படுகிற பரலோக அங்கீகாரம் என்பதை நினைவில் வையுங்கள்.

யெப்தாவைக் குறித்து நியாயாதிபதிகள் பதினொன்றாம் அதிகாரம் முதல் வசனம் முதல் பன்னிரண்டாம் அதிகாரம் ஏழாம் வசனம் வரை பரிசுத்த ஆவியானவர் பதிவு செய்து வைத்து இருக்கிறார்.



அவனைக் குறித்த வெகு அழகான, அதே வேளையில் வெளிப்படையான அறிமுகத்தை நியாயாதிபதிகள் 11:1ல் காணலாம். கீலேயாத்தியனாகிய யெப்தா பலத்த பராக்கிரம சாலியாக இருந்தான்.

கீலேயாத் என்பது யோர்தானுக்கு கிழக்கே உள்ள செழுமையான மலை தேசம், பிஸ்கா, அபாரிம், பேயோர் ஆகிய பகுதிகள் இதில் அடங்கும். இதன் வடபகுதி மனாசேக்கும், தென்பகுதி ரூபனுக்கும் வாக்குத்தத்த தேசப்பங்காக கொடுக்கப்பட்டது. யெப்தாவின் தகப்பனின் பெயர் கிலேயாத் என்பது குறிப்பிட வேண்டிய அம்சம்.

இந்த கிலேயாத் எப்படியோ தவறி ஒரு பரஸ்திரியுடன் உறவு வைத்த படியால் ஒரு மகனை பெற்றான். அவன் தான் யெப்தா. அவன் பரஸ்திரியின் மகனாக இருந்தாலும் கிலேயாத் அவனைப் பெற்றான் என்பது குறிப்பிடப்பட வேண்டிய சிறப்பு அம்சம்.

ஆரம்ப காலத்தில் கிலேயாத்தின் மனைவிக்குப் பிறந்த பிள்ளைகளும் யெப்தாவும் ஒன்றாகவே வளர்ந்தார்கள் ஆனால் கிலேயாத்தின் மனைவி பெற்ற பிள்ளைகள் பெரியவர்களான பின்பு எங்கள் தகப்பனின் சுதந்தரத்தில் பங்கு இல்லை என்று யெப்தாவை துரத்தி விட்டார்கள்.

இங்கே ஒரு நெருடல் எனக்கு ஏற்படுகின்றது. யெப்தாவின் பிறப்பில் ஏற்பட்ட குற்றத்திற்கு யெப்தா எவ்வளவும் பொறுப்பு கிடையாது. கிலேயாத் அவனை பெற்றான் வளர்த்தான். ஆனால் அவனது பிறப்பை சுட்டிக்காட்டி நீ அந்நியஸ்திரியின் மகன் என்று சகோதரர்கள் அவனை தள்ளியது எத்தனைக் கொடுமை.

அன்று மாத்திரம் இப்படி நடக்கவில்லை இன்றும் சபைகளில் ஊழியத்தில் தலைவரின் பிறப்பின் குலத்தை கண்டுபிடிப்பதே சிலருக்கு வேலை. சிலர் விசுவாசிகளோடும்

சரி ஊழியரோடும் சரி மிக நெருக்கமாக பழகுவார்கள். ஏதோ ஒரு சூழலில் பிறப்பின் குலத்தை கண்டுபிடித்து விடுவார்கள்.

அவ்வளவுதான் ஓ! இவர் இந்த ஜாதியா? என்று ஈனத்தனமாக கேள்வியை கேட்டு அத்துடன் அவரிடம் உள்ள நெருக்கத்தைவிட்டு விலகுவார்கள். அதுமட்டுமா? அவரை வீழ்த்தவும் நினைப்பார்கள்.

ஆவிக்குரியவர்களே! மிகுந்த பாரத்துடன் எழுதுகிறேன். இரட்சிக்கப்பட்ட அத்தனை பேரும் தேவனின் பிள்ளைகள்; கிறிஸ்துவுக்குள் உடன் சகோதரர்கள். சபைக்குள்ளும் ஊழியத்திற்குள்ளும் பிறப்பின் குலத்தை தோண்டி ஆராய்கிற தீய பழக்கம் நம்மைவிட்டு நீங்க வேண்டும்.

கிறிஸ்து வைத்திருக்கிற எல்லா சிலாக்கியத்திற்கும் எல்லோரும் சுதந்திரவாளிகளே. அவர்களின் பங்கை மறைக்க, மறுக்க எவருக்கும் உரிமை இல்லை. அப்படி செய்கிறவர்கள் துணிகரக்காரர்கள். தேவன் அவர்களை சரியாய் நியாயம் தீர்ப்பார்.

தனது தகப்பனின் மகனையே இவர்கள் துரத்தி விட்டார்கள். நடந்தது என்ன தெரியுமா? வீணரான மனிதர்கள் யெப்தாவுடன் கூடிக்கொண்டு அவனோடு கூட யுத்தத்திற்கு போவார்கள். (நியா 11:3)

குடும்பத்துடன் இருந்தவனை வீட்டை விட்டு துரத்தினபடியால் அவனுக்கு வீணரான மனிதர்களோடு ஐக்கியம் ஏற்பட்டுவிட்டது. பிரியமானவர்களே நம்மில் சிலர் இப்படித்தான் சபையைக் கெடுத்துக் கொண்டிருக்கிறோம். அடங்கி இருப்பவர்களை ஆராய்ச்சி பண்ணி அலட்சியம் பண்ணி சபையைவிட்டு வெளியே அனுப்பி விடுகிறோம். அவர்கள் எங்கே போவார்கள்? யோசித்துப் பாருங்கள்.

ஏதோ ஒரு பற்றுக்கொடி அவர்களுக்குத் தேவை ஆனால் சபைக்கு வெளியே சரியான ஆதாரத்துவம் கிடைக்குமா?



கிடைக்காதே! எனவே அவர்களை வீணரான மனிதர்கள் தங்கள் வசப்படுத்திக் கொள்கிறார்கள்.

யெப்தா வீணரான மனிதர்களோடு சேர்ந்ததற்கு யார் காரணம்? கிலேயாத்தின் பிள்ளைகள் அல்லவா? அதாவது அவன் சகோதர்கள் அல்லவா? அப்படியே ஆவிக்குரிய சகோதரர்கள் தங்கள் சபையில் உள்ள எளிமையானவர்களை அலட்சியப்படுத்துவதால் அவர்கள் வீணரான மனிதரோடு சேர்ந்து கொண்டு ஊழியத்திற்கு எதிராக அம்பைத் தொடுக்கிறார்கள்.

எனது நண்பரில் ஒருவரான போதகரின் சபையில் சில ஆவிக்குரிய பெலவீனமுடைய சிலருண்டு. ஒரு நாள் பேச்சுவழக்கில் இப்படிப்பட்ட ஆட்களை இன்னும் சபையில் வைத்திருக்கிறீர்களே என்று கேட்டேன். அவர் அற்புதமான பதில் சொன்னார். பாஸ்டர் அவர்கள் இங்கே இருந்தால் சில பெலவீனங்களோடு மட்டும் இருப்பார்கள். கர்த்தர் அதை மாற்றுவார். ஆனால் அவசரப்பட்டு அவர்களை வெளியே அனுப்பி விட்டால் ஒரே அடியாக பிசாசுகளாக மாறிவிடுவார்கள் என்றார்.

இது மெத்தவும் உண்மை என்பதை அனுபவ பூர்வமாக நான் உணர்ந்திருக்கிறேன். எனக்கன்பானவர்களே! நமது ஐக்கியத்தில் இருப்பவர்களை துரத்துவதற்கு நினைக்காதீர்கள். விசுவாசத்தில் பெலவீனரைத் தாங்குங்கள்.

- ஒருவரையும் பிறப்பின் மூலத்தை வைத்து நியாயம் தீர்க்காதீர்கள்.
- ஒருவரையும் துரத்துவதற்கு துணியாதீர்கள்.

எவன் நிமித்தம் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ என்பதை உணர்ந்து ஆண்டவருக்குள் அடங்கியிருங்கள், அனைவரிடமும் அன்பு செலுத்துங்கள்.

# 2

## கர்த்தருக்கு பிரியமானவன்

ஒரு நாள் கிலேயாத்தில் மிகப்பெரிய கலக்கம். காரணம் அம்மோன் புத்திரர் இவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணவந்தார்கள்.

இவர்களில் ஒருவரிடமும் யுத்தத்தை தலைமையேற்று நடத்த பெலன் இல்லை. எனவே கிலேயாத்தின் மூப்பர் சங்கம் தோப் தேசத்தில் தங்கியிருக்கும் யெப்தாவிடம் ஓடிற்று.

நீ வந்து நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ண எங்கள் சேனாதிபதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள் (நியா 11 : 7,8)

எவ்வளவு பெரிய ஆச்சரியம் பார்த்தீர்களா? சகோதரர்கள் துரத்திவிட்டார்கள், இன்றோ மூப்பர்கள் சேனாதிபதியாக இருக்கும்படி அழைக்கிறார்கள்.

தெய்வப்பிள்ளையே! உங்களை உற்சாகப்படுத்தும்படி ஒன்றை சொல்ல விரும்புகிறேன். மனிதர்கள் உங்களை துரத்திவிட்டார்களா? இருக்கும் இடத்தை விட்டு நீங்கள் மாற்றப்பட்டு விட்டீர்களா? அல்லது மனிதர்களால் ஏமாற்றப்பட்டீர்களா? ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். எவர்கள் உங்களுக்கு விரோதமாக எழும்பினார்களோ? அவர்கள் உங்கள் பட்சத்திற்கு வருவார்கள் நீங்கள் முன்பை விட உயர்ந்த இடத்திற்கு மாற்றப்படுவீர்கள் - ஏற்றப்படுவீர்கள்.

எனக்கு ஏன் இந்த நிலை தேவன் ஏன் அனுமதித்தார். என் உரிமையை நான் இழந்துவிட்டேனே என நீங்கள்



அங்கலாய்க்கிறீர்களா? யெப்தாவை பாருங்கள் துக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

பின்னாளில் கிலேயாத்தின் குடிகளுக்கு சேனாதிபதியாய், தலைவனாய், நியாயாதிபதியாய் யெப்தா வரவேண்டும் என்பது தேவனின் திட்டம், எனவே சேனைக்கு அதிபதியாக அவன் மாறுவதற்கு யுத்தக்கலையை கற்று தேர வேண்டியது அவசியம்.

இப்போது கவனியுங்கள் யெப்தா தோப் தேசத்தில் குடியிருந்த நாட்களில் **யுத்தத்திற்கு போய்க்கொண்டு** இருந்தான். எதிர்கால தலைமைத்துவத்திற்கு தேவையான யுத்தக் கலையைக் குறித்த அறிவை - திறனை யெப்தாவிற்கு தோப்பில் இருக்கும்போது தேவன் ஏற்படுத்தினார்.

சில அனுபவங்கள் தேவனாலே நமக்கு முன் கூட்டியே வழங்கப்படுகிறது. அதன் பின்னால் எதிர்கால இரகசியம் மறைந்திருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

மோசே பார்வோனின் அரண்மனையில் இருந்து எகிப்தில் சகலகலைகளில் தேர வைத்தது தேவனின் உன்னதமான திட்டம். அப்போஸ்தலனாகிய பவுலை கமாலியேலின் பாதத்தில் வேதம் கற்க வைத்து பண்டிதனாக்கியது தேவனுடைய உன்னதமான திட்டம்.

யெப்தாவை தோப்பில் யுத்தங்களுக்கு அனுப்பி வைத்தது தேவனின் உன்னத திட்டம். அங்கு அவனுக்கு உறுதியான அஸ்திபாரமும், உரமும் ஏற்பட்டது.

தெய்வப்பிள்ளையே! நீங்கள் சலிப்புடன் இருக்கக் காரணம் என்ன? ஐயோ நான் இடம் மாற்றப்பட்டு விட்டேனே, ஏமாற்றப்பட்டுவிட்டேனே என கலங்குகிறீர்களா? இல்லை இல்லவே இல்லை. உங்களுக்குரிய எதிர்கால உயர்வுக்கு உங்களை தகுதிப்படுத்தும்படி உங்களை பணிமனைக்குள்ளே கர்த்தர் அனுப்பி இருக்கிறார். யுத்தத்தை யெப்தா கற்ற பின்

தலைவனாக மாறியது போல நீங்கள் பணி தீர்க்கப்பட்டவுடன் உரிய இடத்திற்கு தேவனால் கொண்டு வரப்படுவீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்த அதிகாரத்தின் தலைப்பைப் பாருங்கள், கர்த்தருக்கு பிரியமானவர் என்று நான் வைத்ததற்கு ஒரு காரணம் உண்டு. நீதி மொழிகள் 16 : 7 ஆம் வசனத்தில் ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவன் சத்துருக்களும் அவன் பட்சத்தில் வருவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

யெப்தாவின் சத்துருக்கள் அவனைத் தேடி வந்தபடியால் வசனத்தின் படி அவன் வழிகள் கர்த்தருக்குப் பிரியமானதாக இருந்தது என்று என்னால் தைரியமாக சொல்லமுடியும்.

கீலேயாத்தில் மட்டுமல்ல தோப் தேசத்திலும் அவன் தனது வழியை தேவனுக்கு முன்பாக செவ்வையாய் வைத்திருந்திருப்பான் என்று நான் நம்புகிறேன்.

வீணரான மனிதரோடு சேர்ந்து கொண்டு யுத்தத்திற்கு போனானே தவிர, அவன் வீணன் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் பல திவ்விய சுபாவங்கள் அவனுக்கு இருந்ததை வேதத்தில் தெளிவாக காணமுடிகிறது.

பிரியமானவர்களே! சத்துருக்கள் பெருகியிருக்கட்டும் அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம். அதே வேளையில், அவர்களில் பலர், படிப்படியாக அணி அணியாக நம்மை தேடி வர வேண்டும். அது அவசியம். நாம் தேவனோடு இருக்கிறோம் நமது வழிகள் தேவனுக்கு பிரியமாக உள்ளது என்பதற்கு அதுவே அளவு கோலாகவும் அத்தாட்சியாகவும் இருக்கிறது.

ஈசாக்கின் வாழ்க்கையில் இந்த செயல் பாட்டை காணமுடியும் ஆதியாகமம் 26 : 16ல் அபிமெலேக்கு என்கிற பெலிஸ்திய ராஜா, ''நீ எங்களைவிட்டு போய்விடு'', என்றான் அவ்வாறே ஈசாக்கு அவ்விடம் விட்டு புறப்பட்டு பெயர் செபாவிற்கு வந்து விட்டான்.



நடந்தது என்ன தெரியுமா? அபிமெலேக்கும் அவன் சிநேகிதன் அகுசாத் மற்றும் அவன் சேனாதிபதியாகிய பிகோலும் ஈசாக்கைத் தேடி வந்தார்கள் (ஆதியாகமம் 26 : 26)

ஈசாக்கு அவர்களை நோக்கி ஏன் என்னிடத்தில் வந்தீர்கள்? நீங்கள் என்னை பகைத்து என்னை உங்களிடத்தில் இராதபடிக்கு துரத்தி விட்டீர்களே என்றான். (வசனம் 27)

இதற்கு அபிமெலேக்கு சொன்னபதிலை பாருங்கள் ''நிச்சயமாய் கர்த்தர் உம்மோடு கூட இருக்கிறார் என்று கண்டோம், (வசனம் 28) எவ்வளவு யதார்த்தமான பதில் பார்த்தீர்களா?

ஈசாக்கோடே கர்த்தர் இருக்கிறதை அவன் சத்துருக்கள் அறிந்து அவன் பட்சத்தில் வந்தார்கள்.

உங்களோடு கர்த்தர் இருக்கிறதையும் உங்களில் கர்த்தர் கிரியை நடப்பிக்கிறதையும் உங்கள் சத்துருக்கள் எப்போது காண்கிறார்களோ அப்போது மட்டுமே அவர்கள் உங்களை தேடி வருவார்கள்.

பிரியமானவர்களே! நான் கேட்கிற கேள்வியாய் இதை நீங்கள் எடுக்காமல் நீங்களே இந்த கேள்வியை கேட்டுப் பாருங்கள்.

உங்களோடு கர்த்தர் நிச்சயமாய் இருக்கிறார் என்பதை உங்கள் வாழ்க்கை வெளிப்படுத்துகிறதா?

உங்கள் உள்ளான, புறம்பான வாழ்க்கையில் உங்கள் வழிகள் கர்த்தருக்கு பிரியமாய் இருக்கிறதா?

இந்த கேள்விக்கு உங்கள் மனம் ஆம் என்று சொல்லுமானால் நீங்கள் பாக்கியவான்கள்; இன்னும் சில நாட்களில் உங்கள் சத்துருக்கள் உங்களைத் தேடிவந்து நல் மனம் பொருந்துவதை நீங்கள் கண்ணாரக் காண்பீர்கள்.

இல்லை என்று உங்கள் மனம் சொல்லுமானால், உடனே உங்கள் வழிகளை சீர்படுத்தி கொள்வது அவசியம். அதிகக் கேடான ஒன்றும் உங்களுக்குவராதபடி நீங்கள் முந்தி உங்கள் வழிகளை சீர்ப்படுத்துங்கள்.

யெப்தாவைப் போலவே மற்றுமொரு நியாயாதிபதியின் வாழ்க்கை வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. அவனது முடிவு மிகவும் பரிதாபமானது, ஏறக்குறைய தற்கொலைக்கு சமமான மரணம் அது.

யார் என்று புரிந்து கொண்டீர்களா? பிறந்த நாள் முதற்கொண்டு மிகத்தூய்மையாக தனது பெற்றோர்களால் வளர்க்கப்பட்ட சிம்சோனே அவன்.

இளம் வயதில் கர்த்தரின் ஆவியானவர் அவனுக்குள்ளும் அவனைக் கொண்டும் மகிமையான காரியங்களை நடப்பித்தார். ஆனால் அவனது வழிகள்? விலக ஆரம்பித்தது. அது மட்டுமா? எச்சரிப்பு மணிகள் பலமுறை அடித்த போதும் அவன் காதுகள் அடைபட்டு போயிருந்தது. நடந்தது என்ன? சிநேகம் என்று எந்த வழியை தேடிப் போனானோ அதே வழி அவனுக்கு சத்துருக்கள் மேற்கொள்ளும் வழியாய் அமைந்து விட்டது.

முடிவு என்ன? கண்கள் பிடுங்கப்பட்டது, மாவரைக்கும் வேலைகள், கட்டுகள், கண்ணீர் வரவழைக்கும் நிந்தைகள். ஏன் இந்த அவலம்? கர்த்தருக்கு பிரியமான வழிகளில் அல்ல, கண்களுக்கும் உலகத்திற்கும் பிரியமான வழிகளை அவன் தேடிக் கொண்டது தானே? பக்தியுள்ள தாய்க்கு பிறந்த சிம்சோன் பாதை மாறினான். ஆனால் பரஸ்திரீக்கு பிறந்த யெப்தா பார்த்து நடந்தான் என்பது குறிப்பிடதக்கது. ஆம் நமது பெற்றோர்களின் ஆவிக்குரிய அனுபவம் எது என்பது முக்கியமல்ல, நமது சொந்த அனுபவம் எது என்பதே முக்கியம்.

யார் யாரையோ பிரியப்படுத்த எதை எதையோ செய்கின்றோம் ஆனால் எபேசியர் 5 : 10ல் கர்த்தருக்கு



பிரியமானது இன்னதென்று சோதித்துப் பாருங்கள் என்று எழுதப்பட்டுள்ளது. எனவே மனிதனை பிரியப்படுத்துவது கண்ணியாய் இருக்கும் என்று அறிந்து கர்த்தருக்கு எதுபிரியம் என்று சோதித்து அறிந்து அதனை காலத்தே நிறைவேற்றுவது நமது தலையாயக் கடமை.

**கர்த்தருக்கு எது பிரியம் :** நமது இரட்சகரின் உலக வாழ்க்கையை கூர்ந்து கவனித்துப் பாருங்கள். அவர் தேவனாகவும் தேவகுமாரனாகவும் இருந்தார். எனினும் மிக இளம் பிராயத்திலே பிதாவுக்கடுத்தவைகளில் சரியாய் இருக்க தன்னை ஒப்புக்கொடுத்தார்.

இந்த ஒப்புக் கொடுத்தலின் முக்கியத் திருப்புமுனை யோர்தான் ஆற்றங்கரையில் நடந்தேறியது. வேண்டாம் என யோவான் தடுத்த போதும், வேண்டும் என்று தடையை தகர்த்து தண்ணீர் முழுக்கை கிறிஸ்து பெற்றார். என்னே! ஆச்சரியம் பரலோகத்தில் இருந்து பிதா மண்ணோர் காது கேட்க ''நீர் என்னுடைய நேச குமாரன் உம்மில் நான் பிரியமாயிருக்கிறேன்'' (லூக்கா 3 : 22) என்று முழங்கினார்.

பாருங்கள் உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று பிதா இயேசுவை நோக்கி திருமுழுக்கு பெற்ற பின்னரே சொன்னார். அன்பு வாசகரே! நீங்கள் தேவ நீதியை நிறைவேற்ற தாமதிக்கக்கூடாது. தேவன் உங்களை விஷேித்த கிருபையால் நிறைந்திருக்கலாம். ஆனால் உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று மகிழும்படி வேத வசனத்திற்கு உங்களை ஒப்புக் கொடுப்பதே ஒப்புயர்வற்றது.

வேத வசனத்திற்கும் தேவ சத்தத்திற்கும் செவி கொடுக்காமல் கர்த்தருக்கென்று எவ்வளவு வாரிக் கொடுத்தாலும் தேவன் பிரியப்படுவதில்லை.

கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்படிகிறதை பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்கு பிரியமா

இருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் (1 சாமு 15 : 22) என்று வசனம் சொல்லுவதை சிந்தித்துப் பாருங்கள்.

நீதி 12 : 22ல் உண்மையாய் நடக்கிறவர்களோ, அவருக்கு பிரியம் என்று எழுதப்பட்டுள்ளதை ஈண்டு சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். சிலர் உண்மையை போல் பேசுவார்கள். பேச்சு முக்கியமல்ல உண்மையாய் நடக்கிறவர்களே, தேவனுக்குப் பிரியமானவர்கள்.

ஒரு ஆவிக்குரிய தலைவரிடம் மற்றொரு ஆவிக்குரிய தலைவர் ஒரு விளக்கம் கேட்டு கடிதம் எழுதியிருந்தார். இந்த குறிப்பிட்ட சகோதரனைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள். அவரைக் குறித்து உங்கள் சாட்சி என்ன? என்பதே அக்கடிதத்தின் சாராம்சம்.

இந்த ஆவிக்குரிய தலைவர் எவரையும் குறைசொல்லி பேசமாட்டார். அதே வேளையில் ஒரு ஆவிக்குரிய தலைவரின் கேள்விக்கு உண்மையான பதிலை எழுத வேண்டும் என்ற ஆதங்கம் அவருக்கு எனவே ''இந்த சகோதரரை எனக்கு நன்றாக தெரியும் நல்லவர், எப்போதாவது உண்மை பேசுவார்'' என்று நச் சென்று பதில் எழுதினார்.

அவர் பொய் பேசுவார் என்று அல்ல, அவர் உண்மை பேசுவார் என்றும் அல்ல, அவரது உண்மை நிலையை குற்றப்படுத்தாமல் எழுதினார். ஆம் இன்றைய ஆவிக்குரியவர்களின் உண்மை நிலை இது தான். பேச்சில் உண்மை இல்லை, நடக்கையில் உண்மையில்லை, பரலோகமே இறங்கி வந்து விடுவது போல பேச்சு ஆனால் பாதாளமே வெட்கப்படும் அளவிற்கு உள்ளான ஜீவியம் இதனை தேவன் வெறுக்கிறார்.



பிரியமானவர்களே உங்கள் வழி கர்த்தருக்கு பிரியமானது தானா? உங்கள் நடக்கையில் கர்த்தர் விரும்புகிற உண்மை இருக்கிறதா? யோசித்துப் பாருங்கள்.

தீர்க்கதரிசி, கேயாசியைப் பார்த்து எங்கேயிருந்து வந்தாய்? என்று கேட்டார் அதற்கு அவன் உமது அடியான் எங்கும் போகவில்லை (ஐஐ இராஜாக்கள் 5 : 25) என்று ஒரே போடு போட்டு விட்டான். தவறு செய்தது இரண்டாவது பட்சம் ஆனால் தவறான தகவலை தருவது மகா கேடானது.

கர்த்தர் ஆதாமைப் பார்த்துக் கேட்டார் ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? ''நான் நிர்வாணியாய் இருக்கிற படியால் உமக்கு பயந்து ஒளிந்து கொண்டேன்'' பார்த்தீர்களா! ஒரே வரி பதில் ஆனால் அதன் பின்னணியில் எல்லா உண்மையும் வெளிப்படுகிறது எனவே தான் ஆதாம் தேவனிடத்தில் இரக்கத்தைப் பெற்றான்.

ஆனால் கேயாசியின் நிலை என்ன? எங்கே போனாய்? நான் எங்கும் போகவில்லை இந்த பதிலுக்குள் எல்லா உண்மைகளும் அடக்கம் செய்யப்பட்டுள்ளதை கவனியுங்கள். அதனால் தேவசாபம் இறங்கியது குஷ்ட ரோகியானான்.

வாலிப தம்பி! தங்கையே உங்கள் போதகரிடத்தில் பெற்றோரிடத்தில் உங்கள் வார்த்தையும் நடத்தையும் உண்மையுள்ளவைகளாக இருக்க வேண்டும். மேலும் ஒரு காரியத்தை உங்களுக்கு எழுத விரும்புகிறேன். கொலோசேயர் 3 : 20ல் பவுல் எழுதியுள்ளதை வாசித்துப் பாருங்கள் பிள்ளைகளே உங்களைப் பெற்றோருக்கு **எல்லா காரியத்திலும் கீழ்ப்படியுங்கள்** இது கர்த்தருக்கு பிரியமானது.

**கீழ்ப்படிவது தேவனுக்கு பிரியமல்ல எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படிவதே கர்த்தருக்குப் பிரியம் என்பதை மறந்து விடாதீர்கள்.**

சரீரபெலன், கல்வி, அறிவு கூடிவிட்டபடியால் நீங்கள் பெரிய ஆள் என்ற எண்ணம் கொண்டு பெற்றோருக்கு எதிர்த்து நிற்காதீர்கள்.

எல்லா காரியத்திலும்... என்ற வார்த்தை எவ்வளவு ஆழமானது தெரியுமா? ஆபிரகாமை பார்த்து உன் மகன் ஈசாக்கை பலி செலுத்த வேண்டும் என்று கர்த்தர் சொன்னபோது ஆபிரகாம் ஈசாக்கை அழைத்து சென்றான் அப்போது சரியான (கூனுனுணச்ஞ்னு) பதின் வயதில் ஈசாக்கு இருந்தான்.

பலிக்கான விறகுகளை தன் மேல் சுமந்து செல்லும் அளவிற்கு பெலன் பெற்று இருந்த ஈசாக்கு கிழவனாகிய தன் தகப்பன் பலி பீடத்தின் மேல் தன்னைக் கிடத்திய போது மௌனம் சாதித்து சாதுவாக சாகத்துணிந்ததை எண்ணிப் பார்க்கிறேன், என் உள்ளம் நெகிழ்கிறது.

தேவன் ஆட்டுக்குட்டியை காண்பித்தற்கு காரணம் ஆபிரகாமின் விசுவாசமும் கீழ்படிதலுமா? அல்லது ஈசாக்கின் விசுவாசமும் கீழ்படிதலுமா? என்று, ஒரு பட்டிமன்றமே நடத்தும் அளவிற்கு இந்த பகுதி என்னை ஆச்சரியத்திற் குள்ளாக்குகிறது.

இன்றைய வாலிப பிள்ளைகளின் நிலை என்ன? தகப்பனையே தள்ளி பலி செலுத்தி விடுவார்கள். யாரையும் குற்றப்படுத்தும் படியாக நான் இதை எழுதவில்லை. இந்த நாட்களில் கிறிஸ்துவ உலகில் உள்ள வாலிபர்களை குறித்த ஷீ கீச்தூ ரிப்போர்ட் இதுதான் என்பதே உண்மை.

பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் ஒன்பதாம் அதிகாரம் ஏழாம் வசனத்தில் எழுதியுள்ளதை கவனித்துப் பாருங்கள். உற்சாகமாய் கொடுப்பவனிடத்தில் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார், ஆம் தேவனைப் பிரியப்படுத்தும் பல வழிகளில் முக்கியமானது நம்முடைய ஈகை. நம்முடைய கொடையைக் குறித்து பிலி 4:18ல் அது தேவனுக்கு சுகந்த பலியாக இருக்கிறது என்று எழுதப்பட்டுள்ளது.



சிலர் கட்டாயத்திற்காகவும், கடமைக்காகவும் கர்த்தருக்கு காணிக்கை செலுத்துகின்றனர். அவைகளில் கர்த்தர் பிரியப் படுவதுமில்லை. அவைகளை அங்கீகரிப்பதுமில்லை.

நாம் எவ்வளவு கொடுத்தோம் என்பதல்ல எப்படிக் கொடுத்தோம் என்பதே முக்கியம். ஆதி சபையில் அனனியாவும் சப்பீராளும் கொடுத்தார்கள், அது ஒரு சாதாரண காணிக்கையல்ல தங்களின் நிலபுலன்களை விற்று பெரும்பங்கை அப்போஸ்தலர் பாதத்தில் வைத்தார்கள். ஆனால் நடந்தது என்ன பெரும் பங்கை செலுத்தியது முதன்மை படுத்தப்படாமல் ஒரு பங்கை வஞ்சித்து வைத்ததை தேவன் கண்டித்ததோடல்லாமல், அவர்களை தண்டித்தும் விட்டார்.

நம்முடைய ஈகை அல்லது காணிக்கை தேவனுக்கு முன்பாக பலியாக கருதப்படுகிறது. இப்படிப்பட்ட பலிகளின் மேல் (மனப்பூர்வமான, உண்மையான) கர்த்தர் பிரியமாய் இருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. அதே வேளையில் வஞ்சனையும், அநீதியும் நிறைந்த காணிக்கைகளை துன்மார்க்கரின் பலி என்றும் வேதம் சொல்கிறது. அப்படிப்பட்ட பலிகள் கர்த்தருக்கு அருவருப்பானது.

பிரியமானவர்களே! நீங்கள் காணிக்கை கொடுப்பதும், தசமபாகம் செலுத்துவதும் நல்லது தான் ஆனால், அவைகளில் கர்த்தர் சந்தோஷப்பட்டாரா, அவைகளால் கர்த்தர் மகிமைப் பட்டாரா என்பது உங்களுக்குத் தெரியுமா? காணிக்கை தாராளமாய் செலுத்துவதினாலேயே கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும், இராஜ்யத்தையும் சுதந்தரித்துக் கொள்ளலாம் என்று கணக்குப் போடுகிறார்கள். இது கடைந்தெடுத்த முட்டாள்தனம் காணிக்கைகளைக் கண்டு களிப்படைந்து கண்ணியமற்றவர்களை ஆசீர்வதிக்க கர்த்தர் ஒன்றும் அரசியல்வாதியல்ல.

வேதப் புத்தகத்தில் முதல் காணிக்கை சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். அங்கே காயீனையும் அவன்

காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார் என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றை எபிரெய நிருப ஆக்கியோன் தன்னுடைய விசுவாச வீரர்களின் பட்டியலில் முதல் இடத்தில் முக்கியப்படுத்தி கூறுகிறார்.

- ஏ ஆபேல் **விசுவாசத்தினால்** செலுத்தினான்
- ஏ **மேன்மையான பலியை** செலுத்தினான்
- ஏ அவன் **நீதிமான்** என்று சாட்சி பெற்றிருந்தான்
- ஏ **அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்**

என்று எபி 11 : 4, 5ல் அழகுற ஆவியானவர் பதிவு செய்து வைத்திருக்கிறார்.

பிரியமானவர்களே! உங்கள் காணிக்கைகளில் இந்த நான்கு அம்சம் இருக்குமானால் தேவன் உங்கள் மேல் பிரியமாய் இருப்பார். உங்கள் வழிகள் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கும். விசுவாச வீரனாகிய யெப்தாவைத் தேடி அவன் சத்துருக்கள் வந்தது போல உங்களையும் தேடி வருவார்கள். இன்னும் சொல்லிக் கொண்டு போக ஏராளம் உண்டு. எனினும் இந்த அத்தியாயத்தினை இத்துடன் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

எவர்கள் யெப்தாவை துரத்தினார்களோ? அவர்களே அவனை அன்போடு அழைத்தார்கள். அதற்கு காரணம் அவனது வழிகள் கர்த்தருக்குப் பிரியமாய் இருந்தது என்பதே, எனக்கு ஆவியானவர் சொல்லி தந்த பாடம். அதையே உங்களுக்கு சொல்லுகிறேன். உங்கள் வழிகளை கர்த்தருக்கென்று சரிபடுத்துங்கள் - ஆயத்தப்படுத்துங்கள்.

# 3

## கர்த்தருக்குள் நம்பிக்கை

நியாயாதிபதிகள் பதினோராம் அதிகாரத்தின் முதல் எட்டு வசனங்களை வாசித்துப் பார்த்தால் உங்களுக்கு ஒரு ஆச்சரியமான செய்தி கிடைக்கும்.

அந்த வசனங்களில், கர்த்தர் - தேவன் என்ற வார்த்தைகள் இருக்காது. அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின் மீது யுத்தம் பண்ண எழும்பி வந்த போது இவர்களோ அல்லது, இவர்களின் மூப்பர்களோ தங்களுக்கு ஒரு தலைவன் கிட்டும்படி தேவனிடத்தில் முறையிட்டதாகவோ அல்லது தேவனைத் தேடியதாகவோ தெரியவில்லை.

மாறாக மனித பலத்தை தேடினார்கள். அவர்கள் கண்ணிற்கும் புத்திக்கும் பராக்கிரமசாலியான யெப்தாவின் உருவமே எட்டியது - கிட்டியது. உடனே புறப்பட்டு தோப் தேசத்திற்கு போனார்கள்.

தன்னைத் தலைவனாக ஏற்றுக் கொள்ள வந்திருக்கும் மூப்பர் கூட்டத்தைப் பார்த்தவுடனே யெப்தாவிற்கு கொஞ்சம் உற்சாகம் கூடிவிட்டது என நினைக்கிறேன். அவனுக்கும் தலைவனாக ஆக வேண்டுமென்ற ஆசை பிறந்து விட்டது.

அன்பானவர்களே! இங்கு நாம் ஒரு காரியத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும், தலைமைப் பதவி நம்மைத் தேடி வரவேண்டுமே தவிர அதைத் தேடி நாம் ஓட கூடாது. தலைவர் என்று பலர் அழைக்க வேண்டும் என்பதற்காக சில தலையாட்டி பொம்மைகளை சேர்த்து வைத்து கொள்ளவும் கூடாது.

தலைவர் பதவியில் அமரவேண்டும் என்ற அரிப்பினால் கட்சியை உடைத்து புதிய கட்சியை துவங்கும் பழக்கம் அரசியலுக்கே உரியது. அந்த காற்றமுத்த மண்டலம் மெதுவாக நகர்ந்து ஆவிக்குரிய உலகத்தில் மையம் கொண்டு விட்டது மிகவும் வேதனையான ஒன்று.

ஸ்தாபகர் + தலைவர் என்று கடுதாசியில் அச்சடித்து அகமகிழும் சிலர் உண்டு, அவர்களுக்காக வருத்தப்படுகிறேன். தலைமைப் பதவி உங்களைத் தேடி வந்தால் தாராளமாக ஏற்றுக் கொள்ளுங்கள், அதுவும் அது தேவனுடைய வேலையாக இருந்தால் மட்டும். மற்றபடி இருக்கிற இடத்தில் ஒழுங்காய் இருந்து கொண்டு உங்கள் வேலையை சரியாய் செய்யுங்கள்.

என்னைக் கூட தலைமைப் பொறுப்பு தேடி வந்தது உண்டு சிலர் தீர்க்கதரிசனம் போல கூட சொன்னார்கள். ஆனால் எனக்குத் தெரியும். இவர்கள் முகஸ்துதிக்காகவும் எனது தற்கால வளர்ச்சியையும் பார்த்து சொல்கிறார்கள் என்று. ஏனென்றால் ஆண்டவர் இதுவரை ஒரு சிறிய அளவு கூட அதைப் பற்றி என்னிடத்தில் பேசியதில்லை.

எனவே எனது ஐக்கியத்தில், எனது ஆவிக்குரிய தலைவருக்கு கீழ்ப்படிந்து ஒழுங்காய் என் ஊழியத்தை செய்கிறேன், என் ஊழியம் கிரமமாய் வளருகிறதே தவிர, சிரமத்தில் வளரவில்லை.

பத்து ஆத்துமாக்கள் கூட இல்லாத நான்கு சபைகளை வைத்துக் கொண்டு ஸ்தாபகர், தலைவர் என்று டம்பம் அடிப்பதில் எந்த லாபமும் இல்லை, தேவன் அதில் பிரியப்படுவதும் இல்லை.

சரி, மீண்டும் யெப்தாவை கவனிப்போம், தன்னை தலைமையேற்க அழைப்பு வந்தபோது தனது பராக்கிரமத்தின் மாட்சிமை இவ்வளவு பெரியதா என்று புளங்காகிதம் அடையாமல் ''கர்த்தர்'' அவர்களை என் முன்னிலையாய் ஒப்புக் கொடுத்தால்'' என்று தனது உரையில் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுத்ததை எண்ணிப் பாருங்கள்.



கீலேயாத்தின் மூப்பர்களுக்கும், யெப்தாவுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலில் கர்த்தர் என்ற வார்த்தையை பயன்படுத்தியது யெப்தாதான். இதை எண்ணிப் பார்க்கும் போது தன் பராக்கிரமத்தைவிட கர்த்தர் மேல் அவன் வைத்திருந்த நம்பிக்கையினிமித்தம் என் உள்ளம் மகிழ்கிறது.

இன்று சிலர் நம்பிக்கை இழந்து தவிக்கிறார்கள், அப்படிப்பட்டவர்கள் யெப்தாவிடம் இருந்த அரிய குணத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். தேவன் மேல் திடமான நம்பிக்கையை யெப்தா வைத்திருந்ததற்கு பின்னணி என்ன என்பதை விளக்குகிறேன் கவனியுங்கள்.

அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு யெப்தா அனுப்பின செய்தியை வேதத்தில் வாசித்துப் பாருங்கள் (நியா 11:14 முதல் 27 வரை). முந்நூறு வருட வரலாற்று நிகழ்வுகளை மிகத் தெளிவாக குறிப்பிடுகிறார், அதில்,

- ஏ கர்த்தர் சீகோனையும் அவனுடைய எல்லா ஜனங்களையும் இஸ்ரவேலரின் கையில் ஒப்புக் கொடுத்தார் (வச 21)
- ஏ கர்த்தர் எமோரியரை தம்முடைய ஜனமாகிய ஜனங்களையும் இஸ்ரவேலருக்கு முன்பாக துரத்தியடித்தார் (வச 23)
- ஏ கர்த்தர் எங்களுக்கு முன்பாக துரத்துகிறவர்களின் தேசத்தை நாங்களும் கட்டிக் கொள்ளுகிறோம். (வச 24)

என்று கர்த்தர் செய்த கிரியைகளை தெளிவாக அறிக்கை செய்ததைப் பாருங்கள்.

மட்டுமல்ல கடந்து வந்த ஊர்களின் பெயர்களையும் வென்ற ராஜாக்களின் பெயர்களையும் மிகச் சரியாக குறிப்பிட்டு கூறுவதைக் கவனித்துப் பாருங்கள்.

யெப்தா தேவனின் வார்த்தைகளை (வரலாற்றை) மிகச் சரியாக அறிந்து அவைகளை இதயத்தில் வைத்து

சிந்தித்தபடியால் தான் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்தான் - வளர்ந்தான் - ஜெயித்தான்.

கடந்த காலத்தில் அல்லது நமது முற்பிதாக்களின் காலத்தில் தேவன் செய்த கிரியைகளை - அற்புதங்களை நாம் தெளிவாக அறிந்து இருதயத்தில் நிறுத்தி வைக்கும் போது மாத்திரமே நமது விசுவாசம், நம்பிக்கை பெலப்படுகிறது என்பதை அறிந்திடல் வேண்டும்.

பிரியமானவர்களே! வேத வசனத்தை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்ற வார்த்தையை சற்று சிந்தியுங்கள். நித்திய ஜீவனுக்கும் வேத வசனத்தை ஆராய்வதற்கும் என்ன சம்மந்தம்? யோசித்துப் பார்த்ததுண்டா?

தேவ வசனத்தை ஆராயும் போது உங்கள் உள்ளம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பிக்கின்றது. அதனால் உங்கள் விசுவாசம் விரிவடைகிறது. உங்கள் நம்பிக்கை விசாலமடைகிறது என்பது உண்மை. விசுவாசம், நம்பிக்கை பெருகுகிறபோது நீங்கள் நித்திய ஜீவனைப் பெறத் தக்கதாக நல்ல போராட்டத்தை போராடி வெற்றி பெறுகிறீர்கள்.

எனது ஊழியப் பாதையில் உடைந்து போன நேரங்கள் உண்டு, உருக்குலைந்து போய் விடுவோமோ என்று உள்ளம் கலங்கியதும் உண்டு. முழங்கால் படியிட்டு ஜெபிக்கக் கூட திராணியற்ற நேரங்கள் வந்தது உண்டு. அந்த வேளையில் எனது ஒரே ஆயுதம், ஒரே அடைக்கலம், ஒரே ஆறுதல் எனது வேதப் புத்தகமே.

எனது வேதத்தை வாசிப்பேன், வாசித்துக் கொண்டே இருப்பேன், திடீரென உள்ளம் விழித்துக் கொள்ளும், வியப்படையும். நான் வாசித்த வேத பகுதியில் தேவன் செய்துள்ள கிரியைகள் அற்புதங்கள் ஆகியவற்றை எண்ணி அக மகிழ்வேன். இந்த தேவன் என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் எனது தேவன் என்று அறிக்கை செய்து துதிப்பேன்.



நிஜத்தில் என்ன நடக்கும் தெரியுமா? அந்த வேதப் பகுதி என் உள்ளத்தில் உள்ள வேதனைப் பகுதிகளை வேர் அறுத்து விடும் அவ்வளவு தான் எதையும், எவரையும், எவ்விடத்திலும் சந்திக்க எஃகு போன்ற நம்பிக்கை எனக்குள் எழும்பி நிற்க ஆரம்பித்துவிடும்.

யெப்தா காட்டில் வசிப்பவன் என்று நினைத்து விடாதீர்கள், அவன் வேதத்தை வாசிப்பவன் (தேவனுடையவைகளை தியானிப்பவன்) என்பதை அறியுங்கள். முந்நூறு ஆண்டு கால நிகழ்வுகளை முறைப்படுத்தி சொல்வதை நீங்கள் சிந்தித்தால், அவனது தியான வாழ்வு எவ்வளவு உயர்ந்தது என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள்.

வேதத்தில் உள்ள வரலாறு மிக முக்கியமானது. இவைகளை மேகம் போன்ற திரளான சாட்சிகள் என்று எபிரெயர் நிருபத்தில் சொல்லப்பட்டுள்ளது. யெப்தா தனது முன்னோர் களுடைய சரித்திரத்தைத் தெளிவாய் அறிந்திருந்தபடியால் அவனுடைய வாழ்விலும், வழக்கிலும் வெற்றி பெற்றான். நாமும் வேத சம்பவங்களை சரியாய் அறிந்து சிந்தித்தால் வருபவைகளை வெல்வது மாத்திரமல்ல வருமுன்னே தடுக்கவும் வல்லமை பெற்றிடுவோம்.

எலியா, எலிசாவின் வரலாற்றை சற்று சிந்தித்துப் பாருங்கள். தலைவனாகிய எலியாவுடன் இளையவனாகிய எலிசா யோர்தானைக் கடந்து செல்கிறான். காற்றுச் சுழலிலே எலியா எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு எலிசா திரும்பி வருகிறான். யோர்தானோ கரைபுரண்டோடுகிறது. இளையவனாகிய எலிசாவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அதே வேளையில் எலியாவின் வாழ்வில் நடந்தது அவன் நினைவிற்கு வருகிறது. உடனே சால்வையை முறுக்கினான். தன்னுடைய பெயரைச் சொல்லாமல் தன் முன்னோராகிய எலியாவின் பெயரைச் சொல்லி யோர்தானை ஓங்கி அடிக்க அது இரண்டாய்ப் பிரிந்து பாதை கொடுத்தது.

பிரியமானவர்களே! நீங்கள் ஒன்றை அறிந்து கொள்ள வேண்டும், வேதத்திலுள்ள நம்முடைய முற்பிதாக்களின் வாழ்க்கையில் நடைபெற்ற அற்புதங்களை நீங்கள் தியானித்து இருதயங்களில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். உங்கள் வாழ்க்கையில் இன்னல்களும், பின்னல்களும் சூழ்ந்து கொள்ளும்போது கவலைப்படாமல் அந்த பிரச்சினைகளில் ஏற்கனவே வெற்றி கண்ட முற்பிதாக்களின் பெயரைச் சொல்லி தேவனை நோக்கி கூப்பிட்டுப் பாருங்கள்.

ஆபிரகாமின் தேவனே, ஈசாக்கின் தேவனே, யாக்கோபின் தேவனே என்று நீங்கள் சொல்ல சொல்ல அவர்கள் வாழ்க்கையில் செய்த அதே அற்புதத்தை தேவன் அப்படியே செய்வார்.

இன்னும் ஒரு சம்பவத்தை நினைப்பூட்ட விரும்புகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் நடுராத்திரி வரைக்கும் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது ஜன்னலில் அமர்ந்து பிரசங்கம் கேட்ட ஐத்திகு என்பவன் தூக்க மயக்கத்தில் மேல்வீட்டில் இருந்து கீழே விழுந்து மரித்துப் போனான். (சபைக்குப் போனால் ஒழுங்காய் உள்ளே போய் உட்காருங்கள், முடியும் வரை விழித்திருந்து பிரசங்கம் கேளுங்கள்)

பவுலுக்கு செய்தி போனவுடன் அவரின் செய்தியை முடித்துக் கொண்டு அவசரமாய் இறங்கி வந்தார். இங்கே பவுலின் செயலைப் பாருங்கள்; பழைய ஏற்பாட்டு ஆகமங்களை நன்கு அறிந்திருந்த அவர் சூனேமியாள் மகன் மரித்தபோது எலிசா ஓடிவந்து அந்தக் குழந்தையின் மேல் முகங்குப்புற விழுந்து உயிர்ப்பித்தது போலவே தானும் ஐத்திகுவின்மேல் முகங்குப்புற விழுந்து ஐத்திகுவை உயிர்ப்பித்தான்.

பார்த்தீர்களா! பவுல் தன்னுடைய முன்னோர்களின் வரலாற்றை - கிரியைகளை சரியாக அறிந்திருந்த படியால் தனக்கு சவால்களாக எழும்பி வந்தவைகளை சாதனைகளாக மாற்றிக் கொண்டார்.

பிரியமானவர்களே! நீங்கள் கிரமமாய் வேதத்தை வாசித்தால் உங்களுக்கு எதிர்கொண்டுவரும் எந்தவித



இன்னல்களையும் ஏற்ற விதத்தில் சந்தித்து ஏற்றமுற, மாற்றமுற எண்ணற்ற வழிமுறைகள் உங்களுக்கு கிட்டுவதுடன் உங்கள் விசுவாசம் வளர்ந்து, விரிந்து பெருக ஆரம்பிக்கும்.

யெப்தா, கானானை சுதந்தரிப்பதற்கு முன் இஸ்ரவேலர் கடந்து வந்த பாதையில் சந்தித்த சாதித்த சகலத்தையும் அறிந்து வைத்திருந்ததினால் அம்மோன் புத்திரர் வந்தபோது விசுவாகத்தில் வீறுகொண்டு உள்ளத்தில் துணிவு கொண்டு உடனே புறப்பட்டான் - பின், வெற்றி கண்டிட்டான்.

தேவனுக்கு யெப்தா வைத்த பெயரைக் கவனியுங்கள் ''நியாயாதிபதியாகிய கர்த்தர்'' (நியா 11:27) நமது ஆண்டவரை மிகச்சரியாக அவன் அறிந்து இருந்தான். விடுவிக்கின்ற ஆண்டவர், போஷிக்கிற ஆண்டவர் என்பது மாத்திரமல்ல அவர் நியாயாதிபதி என்பதையும் அவன் அறிந்து இருந்தான்.

கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவில் வளர வேண்டும் என்று அப்போஸ்தலன் தனது நிரூபத்தில் எழுதியிருப்பதை நினைத்துப் பாருங்கள். நாம் கிறிஸ்துவை அறிந்து இருக்கிறோம் என்பது உண்மை. அதே வேளையில் கிறிஸ்துவை அறிய வேண்டிய விதத்தில் அறிந்து இருக்கிறோமா? என்பதே முக்கியம்.

கிறிஸ்துவை சிலர் இரட்சகராக, பரிகாரியாக அறிந்து இருப்பார்கள். அத்தோடு நின்று விடக்கூடாது அவரின் மகிமை, மாட்சிமை எப்படிப்பட்டது என்று அறிகிற அறிவில் நாம் வளர வேண்டியது முக்கியம்.

நியாயாதிபதியாகிய கர்த்தர் என்று யெப்தா அறிந்திருந்தபடியால் அவர் மேல் முழு நம்பிக்கை வைத்தான். கர்த்தரும் தமது நீதியின்படி அவருக்கு அநுக்கிரகம் செய்தார்.

இன்றைய நிலை என்ன? இரட்சகர் - வைத்தியர் ஆசீர்வதிப்பவர் என்று அறிவித்திருக்கிற சபையார் ''நியாயம் செய்பவர்'' என்பதனை ஏற்றுக்கொள்வதில்லை. அது ஏன் என்று எனக்கு புரியவில்லை.

இன்றைக்கு அநேக பரிசுத்தவான்கள் நீதி மன்றங்களின் நெடிய படிகளில் ஏறி இறங்கிக் கொண்டு இருக்கின்றனர். மிக பக்தியாக பாடும், பேசும் இவர்கள் நியாயாதிபதியாகிய கர்த்தரை அறியாத படியால் உலக பிரகாரமான நீதியை தேடி செல்கிறார்கள்.

பிரியமானவர்களே! உங்களுக்கு வரும் பிரச்சனை தோல்விகள் இவைகளை கண்டு துவண்டு போகாதீர்கள் அல்லது வெகுண்டு எழாதீர்கள். நமக்கு ஒருவர் இருக்கிறார், அவர் நியாயாதிபதியாகிய கர்த்தர்.

உலக வழக்கின்படி நீங்கள் தோற்றுப் போவது போல தோன்றினாலும், நியாயாதிபதியாகிய கர்த்தர் இருக்கிறார் என்று அறிக்கை செய்யுங்கள். அவர் உங்களுக்கு நீதி செய்வார். சிலுவைக்குப் போகும் போது இயேசு தனது நியாயத்தை நிலை நிறுத்த வாதாடவில்லை. ஆனால் அவரின் நீதி மூன்றாம் நாள் சரியாக வெளிப்பட்டது.

கர்த்தருக்குள் நித்திரையடைந்த பாஸ்டர் எ. சுந்தரம் அவர்கள் தனது சாட்சி புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

ஒரு முறை சபையில் ஒரு குழப்பம், இதுதான் உண்மை நிலை என்பதற்கு நீங்கள் சுய விளக்கத்தை ஞாயிறு ஆராதரனயில் சொல்ல வேண்டும், அல்லாவிட்டால் பல குடும்பங்கள் சபையை விட்டு பிரிய நேரிடும் என்று சில அன்புக்குரிய விசுவாசிகள் எனக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

நானும் அப்படி செய்ய வேண்டும் அது நல்லது என்று நினைத்தேன், ஆனால் தேவன் அப்படி பேசக்கூடாது என்று என்னை எச்சரித்தார். நானும் அவர் வார்த்தைப்படியே எதையும் சபையில் பேசவில்லை. நான் எதிர்பார்த்தபடியே சிலர் பிரிந்து போனார்கள். ஆனால் முன்னைவிட எனது சபை அந்த நாள் துவக்கி தீவிரமாய் வளர ஆரம்பித்தது.



பார்த்தீர்களா! நமது நீதியை நிலைநாட்ட நாம் ஏதும் செய்யத் தேவையில்லை. நம்முடன் இருப்பவர் நம்மை அழைத்தவர் **''நியாயாதிபதியாகிய கர்த்தர்''** அவர் மிகச் சரியாக நமக்கு நீதி செய்வார், நமது சத்துருக்களையும் நியாயம் விசாரிப்பார்.

எதிர்ப்பு எந்த திசையில் இருந்து வரும் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. சில வேளைகளில் அது வெளிப்படையான எதிரிகளிடமிருந்து வரும், ஆனால் சில சமயங்களில் நாம் எதிர்பார்க்காத காரியத்தில் எதிர்பார்க்காத மக்களிடமிருந்து நமக்கு வரும். இதற்கு யெப்தாவின் வாழ்க்கை நமக்கு நல்ல சாட்சி.

தாவீது பெலிஸ்தியனாகிய கோலியாத்தை கொன்று, வென்று திரும்பி வரும் வேளையில் மகளிர் சபை அவனுக்கு புகழாரம் சூட்டிய போது பொறுக்க முடியாமல் அவனது தலைவனே அவனுக்கு எதிரியாக மாறினான்.

அதுபோலவே யெப்தா அம்மோன் புத்திரரை வென்று வாகைசூடி திரும்பி வந்த போது எப்பிராயிம் புத்திரர் யெப்தாவிற்கு எதிராக திரண்டனர். (நியா 12:1)

இவர்கள் எதிராக வந்ததற்கு காரணத்தைப் பாருங்கள்; உப்பு சப்பு இல்லாத காரணம்தான். ஆம் பெய்தாவிற்கு கிட்டிய புகழ்ச்சியை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை, வயிற்றெரிச்சல் வம்புக்கு புறப்பட்டு விட்டனர்.

அவர்கள் சொன்ன காரணம் என்ன தெரியுமா? ''நீ அம்மோன் புத்திரரோடு யுத்தம் செய்ய போன போது எங்களை ஏன் அழைக்கவில்லை'' (நியா 12:1)

இது ஒரு காரணமா? யோசித்துப் பாருங்கள், கீலேயாத்தின் குடிகளின் சேனை போதும் என்று நினைத்து இருப்பான் எனவே புறப்பட்டு விட்டான். இது குற்றமா?

இன்றைக்கும் சில எப்பிராயீம் கூட்டம் இப்படி சபையிலும் குடும்பத்திலும் இருக்கத்தான் செய்கிறது இந்த கூட்டத்திற்கு

ஏன் என்னை நீங்கள் அழைத்து செல்லவில்லை, இந்த காரியத்தில் எங்களை கேட்காமல் நீங்கள் செய்தது என்ன? என்று சபைப் போதகரை சாடுகிற சிலரை நான் பார்த்து இருக்கிறேன்.

பிரியமானவர்களே! நான் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் உள்ள சபைக்கு ஆராதிக்கவும் ஐக்கியத்திற்காகவும் மட்டும் போங்கள், உங்கள் தலைத்துவத்தை நாட்ட-காட்ட போகாதிருங்கள்

சபையின் ஊழியருக்கு பல பொறுப்புகள் உண்டு, பல நெருக்கடிகளும் உண்டு, சில குடும்பங்களின் காரியங்கள் அவர் பார்வைக்கு வருகிறபோது அதை பத்து பேருக்கு அறிவிக்க முடியாது. எனவே சூழ்நிலைக்கு ஏற்ப சில அவசர அவசிய முடிவுகள் எடுக்க வேண்டி வரும்.

அந்த சூழ்நிலைக்கு தேவையான நபர்களை அழைத்து செல்லவும் கூடும், அந்தக் காரியம் வெற்றியாய் முடிந்தவுடன், சபையில் சாட்சியாய் பாஸ்டர் அறிவித்தால், கர்த்தரை துதியுங்கள். எனக்கு ஏன் முன்பே செல்லவில்லை என்று பாயாதீர்கள்.

யெப்தாவின் மறுமொழியை கவனியுங்கள், நான் உங்களை கூப்பிட்டேன் நீங்கள் என்னை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவில்லை (நியா 12:2)

இதுதான் உண்மை! யெப்தா அழைத்தபோது அசட்டை பண்ணினார்கள். ஆனால் அவன் வெற்றி பெற்று திரும்பும் போதோ ஆத்திரப்பட்டார்கள்.

இப்படியும் சிலர் உண்டு. ஆரம்பத்தில் எதையும் கண்டு கொள்ளமாட்டார்கள், காரியம் வெகு சிறப்பாய்நடந்தேறி விட்டால் அது எப்படி, இது எப்படி என்று குறுக்கு கேள்வி எழுப்புவார்கள்.

இந்த எப்பிராயீமர் யெப்தாவை நோக்கி வீசிய சொல் அம்புகளை கவனியுங்கள்.



உன் வீட்டையும் உன்னையும் கூட அக்கினியால் சுட்டு போடுவோம். (நியா 12:2)

கீலேயாத்தியராகிய நீங்கள் எப்பிராயீமை விட்டு ஓடிப் போனவர்கள்.(நியா 12:4)

ஒரு பக்கம் மிரட்டல், மறுபக்கம் நிந்தித்தல் என யெப்தாவை நோக்கி எப்பிராயீமர் கணைகள் தொடுத்தார்கள், ஆனால் யெப்தாவோ அவர்களை முறியடித்தான்.

பிரியமானவர்களே! உங்களுக்கும் இப்படி வரும், தேவையில்லாமல் சிலர் பகைக்கக்கூடும், மிரட்டல்கள் நிந்தனைகள் உங்கள் மேல் வரக்கூடும். இவைகளால் நீங்கள் சோர்ந்து போகக்கூடாது. கர்த்தர் உங்களை உயர்த்த, உயர்பதவியில் அமர்த்த நினைத்துவிட்டால் இந்த உலகில் எவரும் அதை தடுத்து நிறுத்தவே முடியாது.யெப்தா சாகும்வரை இஸ்ரவேலை நியாயம் விசாரித்தது போலவே கடைசிவரை உங்கள் உயர்வை கர்த்தர் நிலைப்படுத்துவார்.

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்த யெப்தாவின் வாழ்வில் இன்னும் சில நல்ல குணங்களைக் காண்கிறேன். வலிய சண்டைக்கு போகமாட்டேன் வந்த சண்டையை விடமாட்டேன் என்று சிலர் செல்ல கேட்டு இருக்கிறேன். யெப்தா இதற்கு எதிராகவே செயல்பட்டு இருக்கிறார். அவர் தானாக யுத்தத்திற்கு செல்லவும் இல்லை. வலிய யுத்தத்திற்கு வந்தவர்கள் மேல் யுத்தத்தை தானாக துவங்கவும் இல்லை.

அம்மோன் புத்திரர் யுத்தத்திற்கு வந்தபோது கூட சமாதான வார்த்தைகளை முதலில் பேசி நீதி நியாயங்கள் எடுத்துரைத்தான். அம்மோன் புத்திரரின் ராஜா செவி கொடுக்காமல் போன படியால் யுத்தத்தை நடப்பித்தான். அப்படியே எப்பிராயீம் புத்திரரிடத்திலும் பேசினான். அவர்கள் செவி கொடாமல் யுத்தத்தை துவங்கிய படியால்தான் யெப்தா யுத்தத்தை நடப்பித்தான்.

எனக்கு கர்த்தர் மேல் நம்பிக்கை இருக்கிறது. அவர் எனக்கு வெற்றி தருவார் என்ற எண்ணத்தில் நீங்கள் யுத்தத்திற்கு

புறப்படக்கூடாது. கர்த்தர்மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்கும் பட்சத்திலும் நீங்கள் சமாதானத்தையே தேட வேண்டும். அது பலனளிக்காத பட்சத்தில் கூட கர்த்தர் யுத்தம் செய்ய ஒப்புக் கொடுக்க வேண்டுமே தவிர நீங்கள் உங்கள் மாம்ச புயத்தை நீட்டக்கூடாது.

நமது ஆண்டவருக்கு அநேகம் பெயர்கள் வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதிலே ஒன்று யெகோவா - சிட்கேனு (JEHOVAH-TSIDKNNU) என்பதாகும்.

அவருக்கு இடும் நமாம் **நமது நீதியாயிருக்கிற கர்த்தர்** என்பதே (எரே 23:6)

**எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர்** என்பதே அவருடைய நாமம் (எரே 33:16)

நீதியாயிருக்கிற கர்த்தர் நமது பட்சத்தில் இருக்கிற படியால் நம்மை நீதியின் பாதையில் நித்தியம் வரை நடத்த போது மானவராய் இருக்கிறார் என்பதை நினைவில் வையுங்கள்.

இது ஒரு சபையில் நடந்த சம்பவம். ஊழியம் வளர்ந்து செழித்து வருகிற வேளையில் அந்த ஊழியத்திற்கு எதிராக ஒரு சிலர் எழும்பி அந்த ஊழியத்தின் சொத்திற்கு சொந்தம் கொண்டாட முற்பட்டனர். காரியம் முற்றி நீதிமன்றம் வரை சென்று விட்டது.

தனது உபவாசத்தாலும் ஜெபத்தாலும் கண்ணீராலும் அந்த ஊழியத்தை ஸ்தாபித்த தேவனுடைய பிள்ளை திகைத்து நின்றார் நீதியாயிருக்கிற கர்த்தர் எப்படியும் நீதி செய்வார் என்பதை அவரின் அறிக்கையும் பிரசங்கமுமாய் இருந்தது.

நீதி மன்றத்தில் வழக்கு விசாரணையின் போது இந்தப் பொருட்கள் நாங்கள் தந்த தசம பாகத்தில் வாங்கியது. எனவே அவர் அவைகளை திரும்ப எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எதிர் தரப்பினர் வாதாடினர்.

இவர்களும் வேறு வழியின்றி தங்களுக்காக ஒரு வழக்குரைஞரை நியமித்துக் கொண்டனர். இந்தந்த



பொருட்களெல்லாம் எதிர் தரப்பினர் சொல்வது போல் தசமபாகமாக வந்த பணத்தில் வாங்கப்பட்டது உண்மைதான் என்று பதிலுரைத்தனர்.

இந்தக் காரியத்தில் எப்படி எதை ஆதாரமாகக் கொண்டு என்ன தீர்ப்பு செய்வதென்று நீதிபதிக்கே குழப்பமாக இருந்தது.

அப்போது இந்த தேவப்பிள்ளையின் வழக்குரைஞர் நீதிமன்றத்தில் வேதப் புத்தகத்தை திறந்துகாட்டி (எண் 18:31) அது (தசம பாகம்) நீங்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு ஈடான உங்கள் சம்பளம் என்ற பகுதியை வாசித்துக் காட்டினார்

அவ்வளவு தான்! வழக்கே திசை மாறிவிட்டது நீதிமன்றம் விழித்துக்கொண்டது. தசம பாகத்தை பெற்ற அவர் அதே இடத்தில் கடவுளின் திருப்பணியை செய்து வருகிற படியால் அந்த உரிமையில் பங்கு கோரக் கூடாது என்று திட்டமான தீர்க்கமான தீர்ப்பை நீதிபதி வழங்கினார்.

எதிர்ப்பு கொடி பிடித்தவர்கள், நிலைகுலைந்து நின்றார்கள், தலை கவிழ்ந்து சென்றார்கள். கார்த்தர் மேல் நம்பிக்கை வைக்கிறவனும் கர்த்தரை தஞ்சமாகக் கொண்டவனும் பாக்கியவான், யெப்தா தேவன் பேரில் பற்றுதலாய் இருந்தான் நிரந்தர வெற்றியை பெற்றுக் கொண்டான்.

உங்கள் நம்பிக்கையும் வீண் போகாது, உங்கள் முகங்களும் வெட்கப்படாது, நிமிர்ந்து நில்லுங்கள். நியாயாதிபதியாகிய கர்த்தர் நீதியாய் நியாயம் செய்வார்.

# 4

# கர்த்தரிடம் சொன்னான்

ஜெபிக்கும் மனிதன் ஜெயிக்கும் மனிதன் என்பது உண்மை. யெப்தாவின் வாழ்வில் இது மெத்தவும் உண்மையாய் இருந்தது.

யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியில் சொன்னான் (நியா 11:11) என்ற வார்த்தையை கவனிக்கும் போது யெப்தாவின் ஜெப வாழ்க்கையின் தெளிவான சித்திரம் நமக்கு தெரிகிறது.

சரித்திரப் பிரகாரமாய் அவன் ஒரு பராக்கிரமசாலி இதை கீலேயாத்தின் குடிகளும் அறிந்திருந்தனர். இப்படிப்பட்ட தேக பலமுள்ள அவன் யுத்தத்திற்கு போகு முன்பு கர்த்தரிடத்தில் சொன்னான் என்கிற போது என் உள்ளம் மகிழ்வடைகிறது.

தனக்கு யுத்தத்தில் வெற்றி கிட்ட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, தனக்கு அழைப்பு விடுத்திருந்த இந்த மூப்பர்கள் சொன்ன வார்த்தைகளையும் கர்த்தரிடத்தில் சொன்னான் என்பதே அவ்விடத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது.

கர்த்தருடைய சந்திதியிலே என்று வெறுமனே எழுதாமல் **மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே** என்று எழுதப்பட்டு இருப்பதை கவனியுங்கள் (நியா 11:11)

அக்காலத்திலே மிஸ்பாவிலே தேவனுக்கு ஒரு பலிபீடமும், கர்த்தருடைய சந்நிதியும் இருந்தது என்பது



குறிப்பிடத்தக்கது. (THE LORD DWELT IN THOSE DAYS AT MIZPEH. THE LORD HAD A HOUSE AND AN ALTER MIZPEH)

யெப்தா கர்த்தரின் பலிபீட்த்தைத் தேடிச் சென்று தனது காரியத்தை சொன்னதை தியானித்தப் பாருங்கள். சாலமோன் தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பு மக்கள் மோசேயின் காலம் தொட்டு ஆசாரிப்புக் கூடாரத்தில் கர்த்தரை தொழுது கொண்டார்கள்

ஆனாலும் அதற்கு முன்பு இருந்தே மிஸ்பா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது. ஆதியாகமம் 31 ஆம் அதிகாரம் 45 முதல் 50 ஆம் வசனம் வரை ஒரு சரித்திர நிகழ்வு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

வீட்டைவிட்டு ஓடிவந்து விட்ட யாக்கோபை துரத்திக் கொண்டு வந்த லாபான் கீலேயாத் மலையில் கூடாரம் போட்டு இருந்த யாக்கோபைக் கண்டு உடன்படிக்கை செய்து கொண்ட இடம் மிஸ்பா என்பதை அறித்து கொள்ளுங்கள்.

ஆதி 39:49ன்படி மிஸ்பா என்றால் கர்த்தர் கண்காணிக் கிறார் (காவல் கோபுரம்) என பொருள்.

ஆதி 31 : 50ன் படி மிஸ்பா என்றால் கர்த்தர் சாட்சி யாருக்கிறார் என்று பொருள்

ஆதி 31:44ன் படி மிஸ்பா என்றால் உடன்படிக்கையின் ஸ்தலம் என்று பொருள்.

இப்படிப்பட்ட இடத்திற்குப் போய்தான் கர்த்தருடைய சந்நிதியில் யெப்தா தனது காரியங்களை சொன்னான் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவன் சர்வ வியாபியாக இருந்தாலும் கர்த்தருடைய சந்நிதி என்கிற விஷேசித்த இடம் உண்டு என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அதே வேளையில் இந்தக் கல்லில், மலையில், குளத்தில் கர்த்தர் இருக்கிறார் என்று எவராகிலும் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

ஆனால் நாம் தேவனுக்கு என்று அர்ப்பணம் (பிரதிஷ்டை) செய்கிற இடத்தை கர்த்தர் அங்கீரிக்கிறார் என்பது உண்மை. அன்று சாலமோன் தேவாலயத்தை கட்டி பிரதிஷ்டை செய்தபோது என் கண்களும் செவிகளும் எந்நாளும். இவ்விடத்தின் மேல் திறந்து இருக்கும் என்று கர்த்தர் திருவுளம் பற்றினதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக கர்த்தரின் ஆலயம் அவருடைய சந்நிதி என்பதை மறந்து விடக்கூடாது. யெப்தா யுத்தத்திற்கு புறப்படுவதற்கு முன்பாகவும், யுத்தம் முடிந்த பின்பும் மிஸ்பா வந்தது குறிப்பாக சிந்திக்க வேண்டிய பகுதியாகும்.

அதாவது அவன் எதற்கும் எப்போதும் தேவ சமூகத்தை தேடிச் சென்று ஜெயிப்பவன் என்பதே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பும் கருத்தாகும்.

நீங்கள் உங்கள் வீட்டில் எவ்வளவு தான் ஜெபித்தாலும் கர்த்தர் உங்களுக்கு கொடுத்த ஆலயத்தில் - சபையில் போய் முழங்கால் படியிட்டு ஜெபிப்பது மிகவும் அவசியம். அது ஆசீர்வாதத்தை அள்ளித்தரும்

சாமுவேலின் தாயாகிய அன்னாளைப் பாருங்கள் சீலோவில் இருந்த கர்த்தருடைய ஆலயத்தில் மனங்கசந்து அழுது தனது இருதயத்தை ஊற்றி விட்டாள். என்ன ஆச்சரியம்! அடுத்த ஆண்டில் அழகான ஆண் மகனை பெற்று எடுத்தாள்.

கர்த்தருடைய வீட்டில் அமர்ந்து ஜெபிப்பது தனியான சுகம். அது அனுபவித்தவர்களை தவிர வேறு ஒருவரும் விளங்கிக்கொள்ள முடியாது.

எனது வாலிப நாட்களை நினைத்துப் பார்க்கிறேன் எனது பயிற்சி நிலையத்தை விட்டு மாலை வீடு திரும்பியவுடன்,



எனது கால்கள் தானாகவே ஜெபவீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்துவிடும் அங்கே அமர்ந்து ஜெபிக்க, ஜெபிக்க எனக்குள்ளும், என்னை கொண்டும் வெற்றி பெருகிக் கொண்டே வந்தது.

மட்டுமல்ல நான் என் ஊழிய ஆரம்ப நாட்களில் பெரும் பகுதியை ஜெபவீட்டிலேதான் செலவழித்தேன். அதிலும் இரவின் பெரும் பகுதியை ஜெபத்திலேதான் செலவிட்டேன். சில வேடிக்கையான சம்பவங்கள் கூட நடந்திருக்கிறது. அந்நாட்களில் மிக நீண்ட நேரம் வேதம் வாசித்து விட்டு இரவில் என் இருதயத்தை அப்படியே ஆண்டவரிடத்தில் ஊற்றிவிட்டு படுத்துக் கொள்வேன்.

என் இராத் துாக்கம் வித்தியாசமாக இருக்கும், நான் எந்த வேத பகுதியை படித்தேனோ அதே வேத பகுதியை ஆசிரியர் விளக்குவது போல் தேவன் எனக்கு வெளிப்படுத்துவார். நான் அப்படியே அவைகளை கற்று கொண்டேன்.

முன்பு ஒரு புத்தகத்தில் எழுதியிருக்கிறேன், அதை மீண்டும் எழுதுகிறேன், என் ஊழியத்தின் ஆரம்பத்தில் எந்த வேதாகம கல்லுாரிக்கும் சென்றது கிடையாது. ஆனால் தேவனுடைய சந்நிதியில் ஜெபித்து காரியங்களை அறிந்து கொண்டேன்.

இன்று எனது வளர்ச்சியினிமித்தம் பட்டங்களும் அங்கீகாரங்களும் எனக்கு அளிக்கப் பட்டாலும் நான் கர்த்தரின் சந்நிதியில் ஏறெடுத்த ஜெபங்களே எனது வெற்றியின் அஸ்திபாரம்.

யெப்தாவின் வெற்றியின் இரகசியமும் இதுதான். பிரியமானவர்களே நீங்களும் இதைச் செய்து பாருங்கள். தினமும் இப்படி செய்ய முடியாமல் போனாலும் ஞாயிறு தவிர்த்து மற்ற நாட்களில் வாரத்தில் ஒரு நாளாவது உங்கள் ஆலயத்திற்கு சென்று ஒரு மணி நேரமாவது இருதயத்தை

திறந்து ஜெபித்துப் பாருங்கள் உங்கள் வாழ்க்கை முன்பு இருந்த நாட்களை விட செழுமையும் வலிமையும் அடையும்.

சகோதரர் DGS தினகரன் அவர்கள் தனது செய்தியில் வெகு நாட்களுக்கு முன்பு சொன்ன ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது.

மேலை நாடு ஒன்றில் ஜிம் என்ற ஒருவர் இருந்தாராம். அவர் தினமும் தனது ஆலயத்திற்கு சென்று தனது தொப்பியை கழற்றிவிட்டு ''இயேசுவே நான் தான் ஜிம் உம்மை தேடி வந்திருக்கிறேன்'' என்று ஒரு சுருக்க ஜெபம் செய்து விட்டு தொப்பியை அணிந்து கொண்டு போய்விடுவாராம்.

இது தினமும் நடக்கிற வாடிக்கையான சம்பவம். ஒரு நாள் அவர் விபத்தொன்றில் சிக்கி மருத்துவமனையில் படுக்கையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம். அந்த குறிப்பிட்ட ஜெபநேரம் நெருங்கிய நேரத்தில் ஜிம்மின் உள்ளம் தேவாலயத்தை நினைத்து வேதனைப்பட்டதாம்.

ஆனால் அந்த குறிப்பிட்ட ஜெபநேரத்தில் யாரோ ஒருவர் அவர் அறைக்குள் வருவது போன்ற உணர்வு அவருக்கும் ஏற்பட்டதாம். ஜிம் திரும்பி பார்த்தபோது 'ஜிம் நான் இயேசு வந்திருக்கிறேன்'. இத்தனை நாள் நீ என்னை தேடிவருவாய் இன்று உன்னால் முடியாதல்லவா? எனவே நானே உன்னை தேடி வந்து விட்டேன் என்று சொல்லி மறைந்தாராம். அவ்வளவுதான் ஜிம் துள்ளிக்குதித்து தெய்வீக சுகத்தை பெற்றுக் கொண்டானாம்.

இவன் துள்ளிக் குதிப்பதை பார்த்து விட்டு அங்கிருந்த நர்ஸ்களும், டாக்டர்களும் ஓடிவந்து நீ எப்படி திடீரென்று சுகமானாய் என்ற ஆச்சரியத்தோடு கேட்டனராம் அவன் தனது ஜெப நேரத்தைக் குறித்தும சற்று முன்பு இயேசு வந்ததையும் விளக்கமாய் சொன்னபோது அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு இந்த அற்புத சுகத்தைக் கொடுத்த இயேசுவை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம் என்று நர்ஸ்களும் டாக்டர்களும் இன்னும் அநேக



ஜனங்களும் அந்த மருத்துவமனையில் தேவ ஜனங்களாய் மாறினார்களாம்.

ஆம் அவரின் ஆலயத்தை தேடுவோரை அவர் காண்கிறார். கனம் பண்ணுகிறார் நீங்கள் அவர் தெரிந்து கொண்ட ஸ்தலத்தில சொல்லும் வார்த்தைகளும் வடிக்கும் கண்ணீரும் காற்றில் கலந்தோ காய்ந்தோ போவதில்லை, அவைகள் கர்த்தரின் சமூகத்தில் எப்போதும் குறித்து வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

தேவனுடைய சபை ஒரு மிஸ்பா; அது கர்த்தர் கண்காணிக்கும் இடம். அது நம்மைக் குறித்து கர்த்தர் சாட்சி கொடுக்கும் இடம் அது தேவனின் உடன்படிக்கை ஸ்தலம். வெளிப்படுத்தல் முதல் அதிகாரம் 20ஆம் வசனத்தின் படி கர்த்தர் சபை நடுவில் உலாவுகிறார் எனவே அவரின் கண்கள் உங்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது.

யெப்தா தன் காரியங்களை கர்த்தரின் சந்நிதியில் சொன்னான் என்பதை இன்னும் கூட கூர்ந்து கவனிக்க வேண்டும். எதை சொன்னான் ஏன் சொன்னான் என்பதையும் ஆராய்தல் வேண்டும்.

யெப்தா தனது விருப்பத்தின் படியும் மூப்பர்களின் வற்புறுத்தலின்படியும் யுத்தம் செய்ய ஒப்புக் கொண்டாலும் இதைக் குறித்த தேவ திட்டத்தை அறிய விரும்பினான். அவன் மிஸ்பாவில் நின்றதற்கு மூன்று காரணம் உண்டு.

முதலாவதாக கீலேயாத்தின் மூப்பர்களின் வார்த்தையை தேவனுக்கு தெரிவிக்கும்படி. ஏன் என்றால் நாங்கள் உன் வார்த்தையின்படியே செய்யாவிட்டால் கர்த்தர் நமக்கு நாடு நின்று கேட்பாராக என்ற ( நியா 11:10) மூப்பர்களின் வார்த்தையை தேவ சமூகத்தில் தெரிவிக்கும்படியாக

ஏன் என்றால் அக்கால வழக்கின்படி ஆணையிட்டுக் கொள்கிறவர்கள் மிஸ்பாவில் வந்து சொல்வது வழக்கம்

மூப்பர்கள் எவ்வளவு தான் வலுவாக எடுத்துச் சொன்னாலும் யெப்தா அதை முழுவதுமாக நம்பாதபடியால் தன் காரியத்தை கர்த்தரிடம் சொன்னார்.

பிரியமானவர்களே! ஒன்றை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் நான் இதை செய்கிறேன், அதை செய்கிறேன் என்று யாராவது வாக்கு பண்ணினால் அதைக் கண்டு மயங்கவும் கூடாது, உங்கள் நம்பிக்கை அவர்கள் பேரில் சாரவும் கூடாது.

ஒரு பாஸ்டர் தனது பிரசங்கத்தில் சொன்ன அவரின் உண்மையான அனுபவம் இது. அவரின் ஆரம்ப ஊழியகாலத்தில் அவரின் நண்பரும் அவரின் சபை விசுவாசியுமாகிய ஒரு சகோதர் அவரிடம் வந்து பாஸ்டர் நீங்க இனிமேல் கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை அடுத்த மாதத்தில் எனது கம்பெனி துவங்கி விடும் எனது தசமபாகமே உங்களுக்கு போதும் என்று உற்சாக வார்த்தைகளை கூறினார்.

இந்த பாஸ்டருக்கு ஏகப்பட்ட சந்தோஷம் ஆஹா ஒரே ஆள் நமது முழு தேவையையும் சந்திக்கப் போகிறார். இனி அங்கும் இங்கும் ஓடத் தேவையில்லை அதற்கும் இதற்கும் கவலைப்பட வேண்டியது இல்லை என்று ஆனந்தம் அடைந்தார்.

ஆனால் மாதம் ஒன்று கடந்தது, இரண்டு கடந்தது, அந்த சகோதரரின் தொழிலகம் சரியான செயல்பாட்டுககு வரவில்லை. மாறாக வழக்கமாக கொடுக்கும் காணிக்கையைக் கூட செலுத்த முடியாத நெருக்கத்திற்கு உள்ளானார்.

இந்த போதகருக்கு அதற்குப் பின்பு புத்தி வந்தது நல்ல பாடம் கற்றுக் கொண்டார். தனது முழு நம்பிக்கையும் கர்த்தர் மேல் திருப்பினார். இது அவரே சொன்னது.

நான் இங்கு இதைக் குறிப்பிட ஒரு காரணம் உண்டு. நமக்கு வாக்கு கொடுப்பவர்களுக்காக ஸ்தோத்திரம் செலுத்துங்கள். அதே வேளையில் அவர்கள் மனிதர்கள் மாறக் கூடியவர்கள் என்பதையும் மறந்து விடாதீர்கள்.



ஆம் என்றும் ஆமென் என்றும் இருப்பது தேவனுடைய வாக்குத் தத்தங்கள் மட்டுமே. மற்றபடி மனிதரின் வாக்குகள் ஆம் என்றும் அல்ல என்றும் எப்போதும் இருக்கும் என்பது வேதம் நமக்கு சொல்லித் தருகிற பாடம்.

எனவே நமக்கு வாக்குத் தந்திருக்கிற மனிதர் அதை நமக்கு செய்ய திராணியை பெறும்படியாகவும் நமது விசுவாசம் அவரின்மேல் அல்ல அவரை நம்மிடம் அனுப்பி உள்ள ஆண்டவரின் மேல் உள்ளது என்பதையும் தேவனுக்குப் எப்போதும் நாம் தெரியப்படுத்த வேண்டியது அவசியம்.

என்னுடைய சபையிலே கூட பல ஊழிய திட்டங்களுக்கு இவ்வளவு தருகிறோம் என்று வாக்கு செய்கிறவர்கள் உண்டு. இப்படிப்பட்ட நேரங்களில் எனது முதலாவது வேலை என்ன தெரியுமா? கர்த்தாவே இந்த சகோதரன் இதை செய்வதாக வாக்குச் செய்து இருக்கிறார். நான் உம்மை நம்புகிறேன். அதை அவர் நிறைவேற்ற சகல வசதிகளையும் தாரும் என்று ஜெபிப்பேன்.

இப்படி நான் ஜெபித்த நேரங்களில் எல்லாம் எனக்கு வாக்கு செய்தவர்கள் உண்மையாய் அதை நிறைவேற்றி இருக்கிறார்கள். சில வேளைகளில் ஏதோ காரணத்தால் ஜெபிக்காமல் அஜாக்கிரதையாய் போனதுண்டு. அதனால் வாக்கு செய்தவர்கள் நிறைவேற்ற முடியாமல் போனதுண்டு அப்படி வாக்குச் செய்தவர்கள் நிறைவேற்றாமல் போய் விட்டோம் என்று வெட்கப்பட்டு சபையைவிட்டு போய்விட்ட சம்பவங்களும் உண்டு.

யெப்தா சர்வ ஜாக்கிரதையாக மூப்பர்களையும் அழைத்து கொண்டு தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவில் தேவனுக்கு தெரியப்படுத்தி விட்டான்.

இரண்டாவதாக நியாயாதிபதிகள் 11:11ஐ மீண்டும வாசித்துப் பாருங்கள் ஜனங்கள் அவனை தங்கள் மேல்

தலைவனும் சேனைக்கு அதிபதியாகவும் வைத்தார்கள் என்று எழுதப்பட்டு உள்ளது.

ஜனங்கள் அவனை உயர்ந்த இடத்தில் தூக்கிவைத்து விட்டார்கள். மூப்பர்கள் சொன்னதும் இவன் கேட்டதும் தலைவர் பதவி தான். ஆனால் ஜனங்கள் இவனை தலைவனும் சேனாதிபதியுமாய் ஆக்கிவிட்டார்கள்.

இந்த குதுாகலத்திலேயே யெப்தா யுத்தத்திற்கு ஓடிச் சென்று இருக்கலாம். ஆனால் தனது தலைமை மற்றும் சேனாதிபதி பதவியை பெற்றவுடன் நன்றி நிறைந்த உள்ளத்தோடு தேவ சமூகத்தில் வந்து நின்றான் என்பதே இரண்டாவது காரணம் என என் உள் மனம் சொல்கிறது.

தலைமை பதவியை ஏற்றுக் கொண்ட அடுத்த நிமிடம் அவன் மிஸ்பாவில் வந்து தன் காரியங்கள் எல்லாவற்றையும் சொன்னான் என்பதை சிந்தித்துப் பார்த்தேன் என் கண்களில் கண்ணீர் கட்டிக் கொண்டது.

எதை எதையெல்லாம் சொல்லியிருப்பான் என்று எனக்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டேன். ஆ! கர்த்தாவே எல்லாராலும் துரத்தப்பட்டேன் நெருக்கப்பட்டேன். ஆனால் உமது தயவின்படி இன்று இதே ஜனத்திற்கு தலைவனாக என்னை உயர்த்தினீரே உமக்கு கோடி கோடி ஸ்தோத்திரங்கள் என்று கண்ணீர் மல்க கர்த்தரை துதித்திருப்பான் என்று நம்புகிறேன்.

யெப்தாவிற்கு வெற்றி கிட்டியதற்கு காரணம் அவனது பராக்கிரமம் அல்ல. அவன்தான் உயர்வுக்கு மகிழ் கொண்டாடாமல் மிஸ்பாவிற்கு வந்து கர்த்தரிடம் சொன்னதே காரணம் என்பதை மறந்துவிடக் கூடாது.

பிரியமானவர்களே பதவி வரலாம் போகலாம். அதுயாரால் வந்தது என்பது கூட இரண்டாம் பட்சம் தான். ஆனால் அந்தப் பதிவியை பெற்றுக் கொண்டபிறகு நமக்குள்ளும் நம்மைச் சுற்றியும் என்ன மாற்றத்தை ஏற்படுத்துகிறோம் என்பதே முக்கியம்.



மக்கள் உங்களை உயர்வான இடத்தில் வைக்கலாம். உங்களை கௌரவப்படுத்தலாம் தவறில்லை. அதைப் பெற்றுக் கொண்ட நீங்கள் கர்த்தரின் சமூகத்தில் வந்து நின்று நன்றி சொன்னீர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

நம்மை உயர்த்தும்படி தேவன் சில மனிதர்கள் மூலம் கிரியை செய்கிறார். அந்த வேளையில் நமது உள்ளம் கர்த்தரின் சமூகத்தில் கண்ணீருடன் நன்றி சொல்ல வேண்டும். அல்லாத பட்சத்தில் அந்த ஆசீர்வாதம் வந்த வேகத்தில் போய்விடும்.

எனக்கு ஆசீர்வாதங்கள் அங்கீகாரங்கள் உயர்வுகள் வரும் வேளையெல்லாம், கண்ணீர் விட்டு அழுது இருக்கிறேனே தவிர என்றும் நான் மகிழ்ச்சியாக கொண்டாடியது கிடையாது.

எனது முதல் வெளிநாட்டு ஊழியத்திற்காக நான் எனது இருப்பிடத்தை விட்டு புறப்பட்டபோதும் அழுதேன் திரும்ப எனது இடம் வந்து சேர்ந்த போதும் அழுதேன்.

எனது விமானம் புறப்பட துவங்கியவுடன் சக பயணிகள் அதையும் இதையும் வாங்கி புசித்தார்கள், குடித்தார்கள். நான் மாத்திரம் தாரை தாரையாய் கண்ணீர் வடித்தேன்.

ஆ! ஆண்டவரே இந்த உயர்வுக்கு நான் எள்ளளவும் தகுதியில்லை இப்படியெல்லாம் நீர் செய்கிறீரே என்று துதித்துக் கொண்டே சென்று ஊழியம் செய்தேன்.

திரும்பி வருகிறபோது தாயகம் திரும்பும் மகிழ்ச்சி. எனது பட்டணத்தின் இரயில் நிலையத்தில் இறங்கியவுடன் மீண்டும் கண்ணீர் விட்டு அழுதேன் அதற்கும் ஒரு காரணம் உண்டு.

என்மேல் அளவில்லா அன்பு கொண்ட என் சபை மக்கள் என்னை வரவேற்க ரயில் நிலையத்தையே நிரப்பி விட்டார்கள். வரவேற்பு சுவரொட்டிகள், பதாகைகள், பத்திரிக்கை, விளம்பரங்கள், மலர்ச்செண்டுகள், சால்வைகள் என ஏராளமான ஏற்பாடுகள்.

அதைக் கண்ட மாத்திரத்தில் ஆ! ஆண்டவரே நீசனும் அற்பனுமாகிய எனக்கு இந்தத் தகுதி, எதனால் வந்தது நீர் போட்ட பிச்சை என்று வாய்விட்டு கதறி விட்டேன். நான் அழுவதைப் பார்த்த சபை மக்கள் அதுவரை தேக்கி வைத்து இருந்த ஆரவாரத்தை ரயிலேற்றி விட்டு என்னோடு கண் கலங்கி விட்டனர்.

ஆம் நமக்கு வரும் எந்த உயர்வுக்கும் காரணம் அவரே, நம்மில் மேன்மை பாராட்ட ஒன்றுமே கிடையாது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோக தரிசனத்தை விவரிக்கும் போது அந்த இருபத்தி நான்கு மூப்பர்களும் தங்கள் கிரீடங்களை தேவனின் பாதத்தில் வைத்து தாழ விழுந்து பணிந்து கொண்டார்கள் என்று யோவான் எழுதுகிறார்.

ஆம் நமக்கு சிங்காசனமும் கிரீடமும் வந்தாலும் தேவ சந்நிதியில் அவைகளை கழற்றி அவர் பாதத்தில் வைத்து தாழ விழ வேண்டும். அப்போது மாத்திரமே சிங்காசனமும் கிரீடமும் நிற்கும்.

இந்த சிந்தனையில் நான் யெப்தாவின் சூழ்நிலையை தியானம் பண்ணிப் பார்த்தேன். யெப்தா மிஸ்பாவில் நன்றியோடு கண்ணீர் நிறைந்த கண்களோடு கர்த்தருக்கு நன்றியை ஸ்தோத்திரத்தை ஏறெடுத்து தனது காரியங்களை சொன்னான் என்பதே உண்மையாக இருக்க முடியும்.

மூன்றாவதாக அம்மோன் புத்திரரின் ராஜாவிடத்தில் யுத்தம் செய்யப்போக தேவ சித்தத்தை அறியும்படியே அவன் போனான். தனக்கு முன்பாக இருக்கிற இந்த பெரிய யுத்தத்தை எப்படி நடத்துவது, எப்படி துவங்குவது, எப்படி தொடர்வது என்ற திட்டத்தை அவன் தேவ சந்நிதியில் வைத்தே தீர்மானித்தான் என்பதை நாம் யோசித்துப் பார்த்தால் நமது விசுவாசக் கண்களுக்கு மிகத் தெளிவாய் இஃது உண்மை என்று புலப்படும்.



நியாயாதிபதிகள் 11 ஆம் அதிகாரம் 12 ஆம் வசனம் முதல் வாசித்துப் பார்த்தால் யெப்தாவிற்கு யுத்தம் செய்ய ஆவல் இல்லை, மாறாக யுத்தத்தை தவிர்த்து கீலேயாத்தியரை இரட்சிக்கவே திட்டமிட்டான்.

அதனால் தான் யுத்தத்திற்கு புறப்படாமல் எதிராளியான இராஜாவினத்திற்கு ஆள் அனுப்பி எங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறதற்கு எனக்கும் உனக்கும் வழக்கு என்ன (வச 12) என்று கேட்கச் சொன்னான். மட்டுமல்ல இரண்டாம் விசையும் ஆட்களை அனுப்பி கடந்தகால உண்மை நிகழ்வுகளை தெளிவாக எடுத்துச் சொன்னான். அப்படியும் சத்துரு விட்டபாடில்லை.

எனினும் இவன் அதற்காக யுத்தத்தை துவங்கவில்லை. அதன் பின்னர் கர்த்தருடைய ஆவியானவர் இறங்கிய பின்னரே யுத்தத்தை இவன் துவங்கினான்.

எனவே தான் சொல்கிறேன் யெப்தா தான் யுத்தத்திற்கு போவதைக் குறித்த திட்டத்தை - சித்தத்தை அறிவதற்காக மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே தனது காரியங்களை சொன்னான் என்று.

எதிரியோடு யுத்ததை துவக்க, அவனோடு எப்படி பேசுவது என்று திட்டமிட, யெப்தா மிஸ்பாவில் நின்றான்.

ஆனால் மிகப் பெரிய வேலையாகிய கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற சிலர் மிஸ்பா பக்கம் போகாமலே தங்களின் பலத்தில் புறப்பட்டு போவது மிகுந்த வேதனை அளிக்கிறது.

ஒருமுறை ஒரு ஊழியர் கூட்டம் நடந்தது. தலைமை போதகர் ஒவ்வொரு ஊழியரும் எழும்பி நீங்கள் எவ்வளவு நேரம் எப்போது ஜெபிக்கிறீர்கள் என்று சாட்சி சொல்ல வேண்டும் என்று சொன்னார்.

என் உட்பட ஒவ்வொருவராய் எழும்பி சொன்னோம் சிலர் ஒரு மணி நேரம் சிலர் இரண்டு மூன்று என்று அவர்கள் காரியத்தை சொன்னார்கள். ஒரு ஊழியர் எழுந்தார் ஐயா! நான் ஜெபிப்பதே இல்லை என்றார்.

தலைமை போதகர் அதிர்ச்சி அடைந்து விட்டார். ஆனாலும் விட்டபாடில்லை. தம்பி நீங்க ஏன் ஜெபிப்பது இல்லை என்று கேட்டார். அவர் சொன்னார் ஐயா! எனக்கு அதிக வேலை, 24 மணி நேரம் போதவில்லை என்று ஒரு போடு போட்டார் ( அவர் தற்போது ஊழியத்தில் இல்லை என்பது வேறு விஷயம்)

இப்படியும் சிலர் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஜெபிக்காமலே பிரசங்கம், ஜெபிக்காமலே ஊழியம் என்பது அவர்களுக்கு பழக்கமாகி விட்டது. அதனால் தான் அவர்கள் ஊழியத்தில் கனிகள் இல்லை ஆத்துமாக்கள் இல்லை.

பிரியமான ஊழியர்களே விசுவாசிகளே! உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஜெபிக்காமலே ஊழியம் செய்யலாம் ஜீவியம் செய்யலாம். ஆனால் அவைகளில் கனி இருக்காது ஜீவன் இருக்காது ஜெயம் இருக்காது. நீண்டநாள் ஓடாது. எதிர்பாராத வேளையில் துடுப்பு இல்லாத படகைப்போல நீங்கள் அழிவில் மாட்டிக் கொள்வீர்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

**முதலில் மிஸ்பா அடுத்ததே யுத்தம் : முதலில் ஜெபம் அடுத்ததே ஊழியம் இதை மறந்து விடாதீர்கள்.**

யெப்தா மிஸ்பாவிலே

1. தனது விசுவாசத்தை அறிக்கை செய்தான்.
2. தனது நன்றியை தெரிவித்தான்.
3. தனது திட்டதை வடிவமைத்தான்.

நீங்களும் முதலில் மிஸ்பாவிற்கு செல்லுங்கள், யுத்ததில் வெல்லுங்கள்.

# 5

## கர்த்தருக்குப் பொருத்தனை

முழு வேதாகமத்திலும் பொருத்தனை என்பதற்கு உகந்த உயர்ந்த உதாரணம் யெப்தா மட்டுமே. பொருத்தனை செய்து அதை மாற்றாமல், மறைக்காமல், மறுக்காமல் உடனே நிறைவேற்றிய ஒப்புயர்வற்ற மனிதன் யெப்தா.

தேவனுடைய திட்டங்களில் பொருத்தனை என்பது முக்கியமானது. சங்கீதம் 50:14,15 ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள். நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு **உன்னதமானவருக்கு** உன் பொருத்தனையை செலுத்தி ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப் படுத்துவாய் என்று எழுதப்பட்டுள்ளது.

இதில் தேவன் ஆபத்து காலத்தில் நமக்கு சகாயம் செய்ய வேண்டுமென்றால் நாம் பொருத்தனையை செலுத்த வேண்டும் என்பதை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

பொருத்தனை செய்வது வேறு. பொருத்தனையை செலுத்துவது வேறு. பொருத்தனையை எல்லோரும் செய்கிறார்கள் ஆனால் அநேகர் செலுத்த தவறி விடுகிறார்கள்.

பொருத்தனை செய்து அதை செலுத்த தாமதித்து ஆபத்தையும் அபராதத்தையும் பெற்றுக் கொண்ட ஒரு மனிதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தகப்பனையும் தாயையும் விட்டு தமையனுக்கு பயந்து தாய்மாமன் வீட்டை நோக்கி தன்னந்தனியே புறப்பட்டு போனான் யாக்கோபு.

வழியிலே இரவு வந்து விட்டபடியால் வனாந்தரத்தில் கல்லை தலையணையாக வைத்து தூங்கினபோது மிகச் சிறந்த தரிசனத்தைப் பெற்றான். மெய்யாகவே இது வானத்தின் வாசல் என்று மெய்சிலிர்த்த அவன் வாயைத் திறந்து தேனுக்குப் பொருத்தனை பண்ணினான்.

நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும், தேவாரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசம பாகம் செலுத்துவேன் என்று சொல்லி பொருத்தனை பண்ணிக் கொண்டான். (ஆதி 23:22)

இது தேவ தரிசனம் பெற்ற யாக்கோபின் பொருத்தனை. இது அப்படியே இருக்கட்டும். பொருத்தனையைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை கவனித்துப் பாருங்கள்.

நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக் கொண்டால் அதை செலுத்த தாமதியாதே அவர் மூடரில் பிரியப்படுகிற தில்லை. நீ நேர்ந்து கொண்டதைச் செய்.

நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம்.

உன் மாம்சத்தைப் பாவத்திற்குள்ளாக்க உன்வாய்க்கு இடங்கொடாதே. அது புத்தி பிசகினால் செய்தது என்று தூதருக்கு முன் சொல்லாதே. தேவன் உன் வார்த்தைகளினாலே கோபம் கொண்டு உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்? (பிரசங்கி 5:4 முதல் 6 வரை)

மேலே சொன்ன வசனப்பகுதிகளில் நாம் அறிந்து கொள்ள வேண்டியவைகளை வரிசைப்படுத்துகிறேன் கவனியுங்கள்.



1. பொருத்தனை செய்து செலுத்தாதவர்களை வேதம் மூடர் என்று அழைக்கிறது.

2. பொருத்தனை செய்து நிறைவேற்றாமை மாம்சத்தை பாவத்திற்குள்ளாக்குகிறது.

3. அப்படிப்பட்டவர்கள் மேல் தேவன் கோபம் கொள்கிறார். கையின் பிரயாசங்களை அழித்துப் போடுகிறார்.

இப்போது மீண்டும் யாக்கோபின் வாழ்வை கவனிப்போம். பொருத்தனை செய்த உடனேயே தேவன் அவனுக்காக கிரியை செய்ய துவங்கி கிட்டார்.

விலாசம் தேடி அழையாமலேயே மாமன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல மாமன் மகள் வந்து விட்டாள். பெண் தேடி அலையாமலேயே 2 + 2 கிடைத்துவிட்டது (புரியவில்லையா? கடிதம் எழுதுங்கள் விளக்குகிறேன்) ஒரு டஜன் ஆண் மக்கள். போனசாக ஒரு கேர்ள். அது மட்டுமல்ல இரண்டு பரிவாரங்கள். இப்படி எண்ணற்ற ஆசீர்வாதங்களை அவனுக்கு தேவன் அனுமதித்தார்.

அவனது விண்ணப்பத்தின்படியே தேவன் சகலத்தையும் செய்தார். தன் இருப்பிடம் நோக்கி திரும்பும் வேளையிலும் உயிரை வாங்கத் தேடிக் கொண்டிருக்கும் ஏசாவின் மனதை மாற்றினார். மக்னாயிம் என்னும் தூதர் சேனையை வைத்து வழியில் அவனைக் காத்தார்.

கர்த்தர் அவனுக்கு உண்மையாய் இருந்தார். அவனோ தான் பொருத்தனை பண்ணியதை நிறைவேற்ற எள்ளளவும் எண்ணிப் பார்க்கவில்லை. மாறாக சீகேம் புத்திரரின் நிலத்தை சில வெள்ளிக் காசுகளை செலவழித்து வாங்கி சிறந்த ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு ஏல் எல்லோக இஸ்ரவேல் என்று பெயரிட்டான்(ஆதி 33:10,20)

யாக்கோபு பலிபீடம் கட்டியது நல்லதுதான். ஆனால் **நான் நாட்டின இந்தக் கல் தேவனுடைய வீடாகும்** என்பதே பொருத்தனை. நடந்ததை அடுத்த அதிகாரத்தில் காணலாம். (34 ஆம் அதிகாரம்) யாக்கோபின் ஒரே மகள் தீனனாள் தேசத்தை சுற்றிப் பார்க்கப் போனாள். தேசத்து மக்கள் அவளை தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். செய்தி அறிந்த யாக்கோபின் புத்திரர் நயமான வார்த்தை களைப் பேசி தந்திரமான முறையில் சீகேம் புத்திரை கண்ணியில் சிக்க வைத்து சிமியோனும் லேவியும் அவர்களைக் கொன்று தங்களது சகோதரியை மீட்டுச் சென்றார்கள்.

பாருங்கள்! நல்ல குடும்பம், ஒரே பெண், கெட்டுப் போனாள். மகன்கள் கொலைகாரர்களாய் மாறிப்போனார்கள் - அவமானத்தால் யாக்கோபு துடித்தான்.

ஏன் இந்த நிலை? பொருத்தனையை நிறைவேற்றாமல் நிர்விசாரமாய் இருந்தபடியால் தேவனின் கோபம் அவர்கள் மேல் திரும்பியது என்பதே உண்மை.

எனினும் தேவன் நல்லவர் கோபம் கொண்டாலும் மனது இரங்கினார். 35 ஆவது அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். தேவன் யாக்கோபின் தவறை சுட்டிக்காட்டி பொருத்தனையை நிறைவேற்றச் சொல்கிறார் (வசனம் 1) யாக்கோபு குற்றத்தை உணர்ந்தபடியால் உடனே அதை நிறைவேற்றினான். கர்த்தரும் 21 வருடங்களுக்கு முன்பு சொன்ன வாக்கை மீண்டும் உறுதிபடுத்தி இஸ்ரவேல் (வசனம் 10) என்று அழைத்தார்.

பிரியமானவர்களே! நீங்கள் இங்கே உங்களை தற்பரிசோனை செய்து பார்க்க வேண்டும். தெய்வ பிள்ளைகளில் வாழ்க்கையில் ஏற்படும் எல்லா போராட்டங்



களுக்கும் சாத்தானை மட்டும குற்றம்சாட்டக் கூடாது. சில வேளைகளில் கர்த்தரின் கோபத்தினிமித்தம் கூட சில இழப்புகள் வரலாம்.

எனவே நீங்கள் தேவனுக்கு பொருத்தனை செய்தது உண்டானால் அதை உடனே உரிய விதத்தில் செலுத்துங்கள் உங்கள் பிரச்சனை உடனேமாறிப்போகும்.

யோனாவின் வாழ்க்கையில் ஒரு காரியத்தை நான் கற்றுக் கொண்டேன். வேத புத்தகத்தில் தெளிவாக சொல்லா விட்டாலும் அதுதான் உண்மை.

கர்த்தர் அனுப்பும் எவ்விடத்திற்கும் நான் போவேன் என்பது தான் யோனாவின் பொருத்தனை. கர்த்தரோ நினிவேக்கு போகச் சொன்னார். அவனோ அதை மறந்து தர்ஷீக்கு போனான். நடந்தது உங்களுக்குத்தான் தெரியுமே. கடலில் எறியப்பட்டான் மீனினால் விழுங்கப்பட்டான்.

மீன் வயிற்றில் அவனுக்குள் உணர்வு வருகிறது. அவன் செய்த அறிக்கையில் ஒரு வரியை குறிப்பிடுகிறேன் கவனியுங்கள் **நான் பண்ணின பொருத்தனையை செலுத்துவேன்** இரட்சிப்பு கர்த்தருடையது ( யோனா 2:9)

ஆஹா! என்ன ஆச்சரியம் இவன் இந்த வார்த்தையை சொன்னவுடன் கர்த்தரின் கட்டளையின் படி மீன் அவனைக் கரையிலே கக்கிவிட்டது.

பிரியமானவர்களே! நீங்கள் கர்த்தருக்குப் பொருத்தனை செய்தது உண்டானால் அதை உடனே செய்ய தீர்மானியுங்கள். வீணாக வருத்தங்களை சம்பாதிக்க வேண்டாம்.

என்னுடைய சபையில் ஒரு சகோதரி சொன்ன சாட்சியை குறிப்பிட விரும்புகிறேன்.

தனது மகன் வியாதிப்பட்டு இருந்த வேளையில் மிக நீண்ட நாட்களுக்கு மருந்து சாப்பிட வேண்டும் என்று மருத்துவர் குறிப்பிட்டதை தேவ சமூகத்தில் தெரிவித்து, கர்த்தாவே மருந்துக்கு ஆகும் செலவை நான் உமக்கு தருகிறேன், என் மகன் மருந்து சாப்பிடாமல் சுகம் பெற வேண்டும் என்று பொருத்தனை செய்து மருந்து கொடுப்பதை நிறுத்தி விட்டார்.

திடீரென்று அவர்களின் மகள் வியாதிப்பட்டு மருத்துவ மனைக்கு அழைத்து செல்லப்பட்டாள் அங்கே குறிப்பிட்ட தொகை செலவாயிற்று சில நாட்களில் அவர்களின் மகனின் விரல் நசுங்கி குறிப்பிட்ட தொகை செலவாயிற்று

இதில் விசேஷம் என்ன வென்றால் இந்த இரண்டு முறையும் அவர்கள் செலவழித்த மருத்துவ செலவு ஒரே அளவில் இருந்தது. இது இவர்களக்கு ஆச்சரியத்தை தந்தது, மட்டுமல்ல அக உணர்வை தூண்டியது. அந்தத் தொகை, தான் பொருத்தனை பண்ணி செலுத்தாமல் போன தொகையின் இரட்டிப்பு அளவு என்பதை உணர்ந்த அவர்கள் உடனே தேவனிடத்தில் அறிக்கையிட்டு தனது சக்திக்கேற்ப நிறைவேற்றி முடித்தார்கள்.

இங்கே நான் எழுதுவதை சற்று கவனியுங்கள். யாக்கோபு, யெப்தா ஆகியோர் கர்த்தருக்கு முன்பாக பொருத்தனை செய்தார்கள், இது உண்மை. ஆனால் இதில் நமக்கு பெரிய பாடமே இருக்கிறது.

யாக்கோபு பொருத்தனை செய்து ஜெபித்தான். பலனைப் பெற்றுக்கொண்டான். ஆனால் பொருத்தனை யை நிறைவேற்ற வில்லை. அதனால் அவனது வாழ்வில் அடுத்தக் கட்டம் படுதோல்லியானது.



அதே வேளையில் யெப்தா பொருத்தனை பண்ணினான். பலன் பெற்றவுடன் தனது பொருத்தனையை தாமதமின்றி செலுத்தினான். அதனால் அவனது அடுத்தக்கட்ட நடவடிக்கையும் வெற்றியாக முடிந்தது.

எப்பிராயீமர் யெப்தாவிற்கு விரோதமாக எழுந்த போது எப்பீராயீமரை விரட்டியடித்தது மாத்திரமல்ல அன்றைய தினத்தில் 42,000பேரை வெட்டி வீழ்த்தினான் வெற்றியை ஈட்டினான்.

சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு வேளை இவன் நாம் தான் வெற்றி பெற்று விட்டோமே, இனி எதற்கும் பயம் இல்லை என்று பொருத்தனையை நிறைவேற்றாமல் போயிருந்தால் என்ன நடந்திருக்கும்? எப்பிராயீமர் எழும்பின போது வீட்டிற்கும் போக முடியாமல் சுடுகாட்டிற்கு போக வேண்டிய நிலமை ஏற்பட்டு இருக்கும் அல்லவா?

ஒரு சிலருக்கு சந்தேகம் யெப்தா தனது மகளை நரபலி கொடுத்தானா? அதை ஆண்டவர் ஏற்றுக் கொண்டாரா? என்பதெல்லாம் அவர்கள் எழுப்பும் கேள்விகளில் சில.

என்ன செய்தான் என்பது தெளிவாக இல்லை. ஆனால் நிச்சயமாக அவளை தகன பலியாக செலுத்தவில்லை என்பது மட்டும் உண்மை.

பொருத்தனையில் கடைபிடிக்க வேண்டிய நியமங்களை குறித்து லேவியராகமம் 27 ஆம் அதிகாரத்தில் பல காரியங்கள் எழுதப்பட்டுள்ளது.

பொருத்தனை பண்ணியவைகளை பன்மடங்கு கிரயம் செலுத்தி மீட்டுக் கொள்ளும் முறையே தேவன் அதில் தெரிவிக்கிறார். அதே வேளையில் தலையீற்றுகளை மீட்டுக் கொள்ளக்கூடாது என்றும் அது கர்த்தருக்கு பரிசுத்தம் என்றும்

கூறி இருக்கிறார். நர ஜீவன், மிருக ஜீவன், இவைகளில் சாபத் தீடாக தெரிந்து கொள்ளப்பட்டவை மீட்கப்படலா காது என்றும் கூறுகிறது.

இந்த வசனங்களை யெல்லாம் வாசித்துப் பார்த்தால் மனிதர்களை பலியிட தேவன் அனுமதிக்கவில்லை என்றும் பரிசுத்தமாக நேர்ந்து கொண்டவைகள் மீட்கப்படலாகாது என்றும் தெரிகிறது.

எனவே யெப்தாவின் மகள் தகன பலியாக எரிக்கப்படவில்லை என்பது தான் சரி. சரிதான் அப்படியானல் என்ன நடந்தது என்பதையும் நீங்கள் அறிய வேண்டும் தேவனுடைய வாசஸ்தலத்திற்கு அடுத்த பணிவிடைகளை செய்யும்படி அவள் ஆசாரியன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டாள். அவள் வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்யாமல் கன்னியாகவே வாழ்ந்தாள் என்பதே வேத பண்டிதர்கள் தந்துள்ள ஏற்புடைய விளக்கம்.

இதற்கு வேத வசனத்தில் போதுமான ஆதாரம் உண்டு. நியாயாதிபதிகள் 11:37 ஐ வாசித்துப் பாருங்கள் விளக்கம் கிடைக்கும்.

பின்னும் அவள் தன் தகப்பளை நோக்கி, நீர் எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும். நான் மலைகளில் மேல் போய்த் திரிந்து நானும் என் தோழிமார்களும் என் கன்னிமை யிமிமித்தம் துக்கம் கொண்டாட எனக்கு இரண்டு மாதம் தவணை கொடும் (நியா 11:37)

இந்த வசனங்களின்படி யெப்தா தனது பொருத் தனையின் படி அவளைக் கர்த்தருக்கு கொடுத்துவிட்டான். அவளோ தனது வாழ்நாள் முழுவதும் தேவனின் பணிவிடையைச் செய்து தனது ஓட்டத்தை முடித்தாள் என்பது புரிகிறதா?



பிரியமானவர்களே! சரியோ தவறோ தான் சொன்னதை நிறைவேற்ற யெப்தா தன் இருதயத்தில் தேவனுக்கு முன்பாக உத்தமமாய் இருந்தான். அவன் சந்ததி அவன் மகளோடு அழிந்தாலும் அவன் பெயர் இன்று வரை நினைக்கப்படுகிறதை எண்ணிப் பாருங்கள். தேவனை கனம் பண்ணுகிறவர்களை அவரும் கனம் பண்ணுகிறார்.

# 6

# கர்த்தரின் ஆவியானவர்

யெப்தாவின் சரித்திரத்தில் எனக்கு பிடித்தமான வசனம் எது தெரியுமா? நியாயாதிபதிகள் 11:29 ஐ வாசித்துப் பாருங்கள்.

அப்பொழுது கர்த்தருடைய ஆவி யெப்தாவின் மேல் இறங்கினார் என்பது மிகச் சிறந்த அனுபவமாகும்.

யெப்தாவை ஒரு யுத்த வீரனாக தலைவனாக சேனாதிபதியாக அமர்த்தியதும் அங்கீகரித்ததும் இந்த ஆவியானவரே.

பழைய ஏற்பாட்டு காலத்தில் சிறப்பாக நியாயாதிபதிகள் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் மக்களை நேரடியாக நடத்தினார் என்பது வேதம் சொல்லும் உண்மை.

இரண்டு காரியங்களை நாம் இங்கு கவனிக்க வேண்டும். முதலாவது நியாயாதிபதிகளை கர்த்தர் எழுப்பினார். இரண்டாவது அவர்கள் அந்தப் பணியை சரியே செய்ய கர்த்தரின் ஆவியானவர் அவர்களில் சிலபேர் மேல் இறங்கினார். அதைக் குறித்து நியாயாதிபதிகள் புஸ்தகத்தில் காணலாம்.



★ கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்கினார் (6:34)

★ கர்த்தருடைய ஆவி யெப்தாவின் மேல் இறங்கினார். (நியா 11:29)

★ கர்த்தருடைய ஆவி சிம்சோன் மேல் பலமாய் இறங்கினார் (14:6)

★ கர்த்தருடைய ஆவி ஒத்னியேல் மேல் வந்திருந்தார் (3:10)

இஸ்ரவேலரை நியாயம் விசாரித்த பதிமூன்று நியாயாதிபதிகளில் ஆறு பேர் பெரிய நியாயாதிபதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். அதில் ஏகூத் - தெபோராள் நீங்கலாக மேற் சொன்ன மற்ற நான்கு பேர் மேலும் கர்த்தரின் ஆவியானவர் இறங்கினார் என்று வேதத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

இதிலிருந்து காரியத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஜெயமும் கீர்த்தியும் ஆளுகையும் பரிசுத்த ஆவியானவரின் மூலமே நமக்கு கிட்டுகிறது.

பழைய ஏற்பாட்டில் தாம் நினைத்த காரியத்தை சில குறிப்பிட்ட மனிதரைக் கொண்டு நிறைவேற்றும்படி கர்த்தரின் ஆவியானவர் தற்காலிகமாக அவர்கள் மேல் தங்கினார்.

யெப்தாவின் மேல் கர்த்தரின் ஆவி இறங்கின போது அவன் அம்மோன் புத்திரருக்கு விரோதமாய் போனான். அவன் வெற்றி பெற்ற பிறகு அவன் மேல் கர்த்தரின் ஆவியானவர் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

நாம் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள். பழைய ஏற்பாட்டில் சில குறிப்பிட்ட காலம் மாத்திரமே

தங்கும்படி இறங்கின ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் எல்லோர் மேலும் எல்லா காலமுத்தங்கி இருக்கும்படி பூமிக்கு இறங்கி வந்தார்.

பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இயேசு சொன்ன வாக்குத்தத்தத்தை கவனித்துப் பாருங்கள் நான் பிதாவை வேண்டிக் கொள்வேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருள்வார்.

பார்த்தீர்களா! என்றென்றைக்கும் நம்மோடிக்க பரிசுத்த ஆவியை நமக்கு தந்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தம் வந்தது. அவர்கள் பெலிஸ்தியர், மீதியானியர், அம்மோன் புத்திரர் என்ற ஜனக் கூட்டத்தோடு யுத்தம் செய்தார்கள். கர்த்தரின் ஆவியால் வெற்றிக் கண்டார்கள்.

நமக்கு இதைவிட பெரிய யுத்தம் உண்டு. எபே 6:12ல் எவைகளோடெல்லாம் நமக்கு யுத்தம் உண்டு என்று பவுல் வரிசைப்படுத்தி எழுதியுள்ளார்.

1. துரைத்தனங்களோடு
2. அதிகாரங்களோடு
3. இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதிகளோடு
4. பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு

நமக்கு எந்நாளும் யுத்தம் உண்டு.

மனிதர்களோடு யுத்தம் செய்யவே நியாயாதிபதிகளுக்கு கர்த்தரின் ஆவியானவரின் துணை தேவைப்பட்டது. நமக்கு ஆவிகளின் சேனைகளோடு யுத்தம் இதனைவெல்ல பரிசுத்த



ஆவியானவர் தினமும் நம்மோடு தங்கியிருக்க வேண்டியது அவசியம்.

என் அன்பு வாசகர்களே! கர்த்தரின் அபிஷேகத்தை நீங்கள் பெற்று இருக்கிறீர்களா? இல்லை என்றால் உடனே நீங்கள் அதை தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆவியானவர் இறங்கின பின்பே கிரியை செய்கிற வனாகவும் கிருபை பெற்றவனாகவும் யெப்தா மாறினான். நீங்கள் தேவனுக்கென்று எழும்பி பிரகாசிக்க செயல்பட உடனடித் தேவை பரிசுத்த ஆவியின் அபிஷேகமே.

அப் 1:8 ஐ கவனித்துப் பாருங்கள் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்று இயேசு தாமே சொல்லியுள்ளார்.

இதற்கு பேதுருவின் வாழ்க்கை சரியான எடுத்துக்காட்டு, இயேசுவை பிலாத்துவின் அரண்மனையில் விசாரிக்கும் வேளையில் ஒரு ஸ்திரிக்கு பயந்து இயேசுவை மறுதலித்தான். ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் ஆவியின் அனுபவத்தைப் பெற்ற போது திரள் கூட்டத்தைக் கண்டும் அஞ்சாமல் ஜீவாதிபதியை நீங்கள் கொலை செய்தீர்கள் தேவன் அவரை எழுப்பினார் அதற்கு நாங்கள் சாட்சி என்று முழுங்கினான்.

இந்த பெலன் எங்கிருந்து வந்தது பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வந்ததால் அல்லவா? உங்கள் வாழ்வு அர்த்த முள்ளதாக மாற உங்களுக்கு துாய ஆவியின் அபிஷேகம் அவசியம். அதைக் காத்திருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

# 7

# தகப்பனுக்குத் தப்பாத பிள்ளை

யெப்தாவின் வாழ்வில் அவன் பெற்றிருந்த மிகப் பெரிய ஆசீர்வாதம் அவனது மகள்தான் என்பது மிகையாகாது.

தாயைப் போல பிள்ளை என்பது பழமொழி. ஆனால் வேதத்தில் தகப்பனைப் போலவே பிள்ளை என்பது அனுபவப் பூர்வமான உண்மை.

பெற்றோர்களுக்குள் என்ன சுபாவம் இருக்கின்றதோ அது மரபு வழியாக பிள்ளைகளை அடைகிறது, என்பது விஞ்ஞான உண்மை மாத்திரமல்ல வேதம் சொல்லும் உண்மையும்கூட.

ஆபிரகாம் எகிப்து தேசத்தில் தனது உயிருக்கு அஞ்சி தனது மனைவியை சகோதரி என்று கூறினான். அதே அனுபவத்தை ஈசாக்கின் வாழ்விலும் பார்க்கிறோம்.

பஞ்ச காலத்தில் ஈசாக்கு பெலிஸ்தர் தேசமாகிய கேராருக்கு வந்த போது அவ்விடத்து மனிதருக்கு அஞ்சி தனது மனைவியை சகோதரி என்றான் (ஆதி 26:7)

இதே காரியத்தை அடுத்த சந்ததியிலும் காணலாம். ஈசாக்கின் முதிர் வயதில் ஆட்டுத் தோலை போர்த்துக்



கொண்டு யாக்கோபு ஏமாற்றினான். அவனுக்குப் பிறந்த பிள்ளைகளை கவனித்துப் பாருங்கள். தகப்பனுக்கு சற்று ஒருபடி மேலே போய்விட்டார்கள் ஆட்டு ரத்தத்தில் துணியை மூழ்கச் செய்து இது உமது குமாரனாகிய யோசேப்பின் வஸ்திரம், மிருக ஜீவன் அவனை கொன்று போட்டு விட்டது என்று ஏமாற்றினார்கள்.

மட்டுமல்ல தாவீது தனது இச்சையை அடக்க முடியாமல் உரியாவின் மனைவியை எடுத்துக் கொண்டான் அவன் மகன் சாலமோனோ ஐநூறு அறுநூறு என்று மறுமனையாட்டிகளை சம்பாதித்துக் கொண்டான்.

அதே வேளையில் யெப்தாவின் வாழ்க்கையை தியானித்துப் பாருங்கள். அவன் தேவனிடத்தில் எதைச் சொன்னானோ, எப்படிச் சொன்னானோ அதை அப்படியே நிறைவேற்றுவதற்கு அவன் மகள் வைராக்கியம் உள்ளவனாக இருந்தாள்.

யெப்தாவைக் குறித்த வேத பகுதிகளை வியாக்கியானம் செய்கிறவர்கள் இந்த விஷயத்தில் அவனை முட்டாளாகவே சித்தரிக்கிறார்கள். யோசிக்காமல் பதறி பொருத்தனை செய்து வாயின் வார்த்தையினால் பிடிபட்டான் என்று விளக்கமளிக்கின்றனர்.

இதை என் இதயம் ஏற்க மறுக்கிறது. முன் அதிகாரத்தில் நான் குறிப்பிட்டது போலவே '' வருவது எதுவோ '' என்று சொன்னானே தவிர ''எவரோ '' என்று சொல்லவில்லை. என்று தனது இலக்கண அறிவை வெளிப்படுத்தி இருக்கு முடியும், ஆனால் அவனோ ஒரு நீதிமான் ஆணையிட்டதில் நஷ்டம் வந்தாலும் தவறக் கூடாது என்பது அவனது உளவேட்கை.

எனவே தனக்கு எதிர் கொண்டு முதலாவது வந்த மகளைப் பார்த்தவுடன் பாசத்தின் மிகுதியால் தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டான்.

மகளே நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லி விட்டேன், அதை நான் மாற்றக் கூடாது (நியா 11:35) என்று திட்டமாக சொல்லி விட்டான்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், அவன் மகள் போய்விடப் போகிறாளே என்ற ஆதங்கத்தில் அழவில்லை, அதைவிட மேலான நஷ்டத்தை எண்ணித்தான் அழுதான்.

நியாயாதிபதிகள் 11:34 ஐ வாசித்துப் பாருங்கள், அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள், அவளையல்லாமல் அவனுக்கு குமாரரும் இல்லை, குமாரத்தியும் இல்லை ஆம் இந்த ஒரே மகளை நம்பித்தான் அவனது வம்சத்தின் எதிர்காலம் இருந்தது, அந்த மகள் மரித்துப் போகும் பட்சத்தில் யெப்தாவின் முழுவம்சமே முற்றுப் புள்ளியை பெற்று விடும். இந்த எதிர் கால விளைவுகளை எண்ணித்தான் யெப்தா தனது வஸ்திரங்களை கிழித்துக் கொண்டான்.

ஆனாலும் இப்பேர்பட்ட பேரிழப்பு ஏற்பட்ட போதிலும் நான் அதை மாற்றக் கூடாது என்று திடமாய் இருந்தான்.

இப்படி இவன் வைராக்கியமாய் தனது உறுதியில் இருந்தாலும் அது சாத்தியமா? சாத்தியமாகாதா? என்பதற்கு பதில் யெப்தாவின் மகளிடத்தில் தான் இருக்கிறது. இவள் என்ன சொல்வாளோ? என்ற ஐயப்பாடு யெப்தாவிற்கு மின்னல் கீற்றைப் போல உள்ளத்தில் எழுந்திருக்க வேண்டும், எனவே தான் நீ என்னை கலங்கப் பண்ணுகிறாய் என்று கதறினான்.



ஒரு பெரிய அமைதி, எங்கு பார்த்தாலும் மௌனம், ஆயிரம் கேள்விகள் இதயத்தைப் பிளக்க யெப்தாவின் கண்கள் மகளையே பார்க்கிறது.

மகள் மெல்ல, மெல்ல, ஆனால் தெளிவான வார்த்தை களோடு வயைத் திறக்கிறாள். ஆஉறா! எவ்வளவு திடமான வார்த்தைகள், என் தகப்பனே நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்து பேசினீரல்லவா?....... உம்முடைய வாயினின்று புறப்பட்டபடியே எனக்கு செய்யும் என்றாள்.

ஆம். தகப்பனுக்கு தப்பாத பிள்ளை அவள். யெப்தாவின் இதயம் தேவனுக்கு முன்பாக எவ்வளவு உத்தமாக இருந்ததோ, அவ்வளவு உத்தமமாக அவன் மகளின் இதயமும் இருந்தது.

ஏனோதெரியவில்லை, யெப்தாவின் மகளின் பெயரை வேதத்தில் எழுதி வைக்கமால் ஆவியானவர் தடை செய்து விட்டார். பல பரிசுத்த வான்களின் பெயர்களை வைத்துக் கொண்டு, தன் வாழ்க்கையில் சம்பந்தமே இல்லாத காரியங்களை செய்து, அவர்கள் பெயருக்கு அவகீர்த்தியை மக்கள் கொண்டு வருவது போல இவள் பெயருக்கும் கலங்கம் வரக்கூடாது என்று பெயரை குறிப்பாய் விட்டு விட்டாரோ என எண்ணுகிறேன்.

யெப்தாவின் மகள் தகப்பனின் பொருத்தனைக்கு சம்மதிக்காமல் போய் இருந்தால் என்ன நடந்திருக்கும் யோசித்துப் பாருங்கள்; யெப்தா என்கிற வரலாறே கிடையாது.

தகப்பனின் பெயர் தரணியில் நிலைத்து நிற்க தன்னையே ஒப்புக் கொடுத்த மகளின் செயல்தான் மெச்சப்பட வேண்டியது.

தகப்பனைச் சந்தோஷப்படுத்த தகப்பன் சொன்ன வார்த்தையை நிறைவேற்ற சற்றும் யோசிக்காமல், தாமதிக்கமல் அப்படியே ஒப்புக் கொடுத்த அந்த மகளின் செயலினை இந்தக் காலத்து பிள்ளைகள் நிச்சயம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதல்ல, எதையெல்லாம் சாதித்து முடித்தோம், நமது வாழ்வில் எவ்வளவு தேவசித்தம் செய்தோம், எப்படி தேவனை மகிமைபடுத்தினோம் என்பதே முக்கியம்.

ஒரு நாள் ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தேன், அவர்கள் ஆவிக்குரிய குடும்பம் (?) அந்த வீட்டில் குடும்பத் தலைவர் மாத்திரம் குணப்படவில்லை.

நான் சென்ற நேரம் மிகப் பெரிய சத்தம் என் காதில் தெளிவாக விழுந்தது. 'டேய் நீ செத்தால் தான் எனக்கு நல்ல வாழ்வு வரும்' இதைச் சொன்னது பக்கத்து வீட்டுக்காரன் அல்ல, அல்லது அந்தக் குடும்பத்து தலைவியும் அல்ல, அவர்கள் வீட்டில் அபிஷேகம் பெற்ற வாலிபப் பெண். எனக்கு தலை அப்படியே சுற்ற ஆரம்பித்தது, வீட்டிற்குள் நுழைய மனம் இல்லை திரும்பி விட்டேன்.

அடுத்த நாள் அந்த குடும்பத் தலைவரை சந்தித்தேன். நேற்று நான் வந்தேன், நின்றேன், கேட்டேன், திரும்பினேன், என்றேன். அவர் அழுதார் இப்படியெல்லாம் பேசுவதை கேட்க வேண்டுமா என்று மனம் வெதும்பினார்.

நடந்தது என்ன தெரியுமா, அந்தக் கேள்வியே அவருக்கு வியாதியாக மாறி அதி சீக்கிரத்தில் மரித்துப் போனார். அந்தப் பெண், அவளின் வார்த்தையின் படியே அதற்குப் பிறகு திருமணமாகி புருஷன் வீட்டிற்குச் சென்று விட்டாள். ஆனால் தகப்பனை வேதனைப்படுத்திய அவள் எப்படி



கர்த்தருக்கு கணக்கு சொல்லப் போகிறாளோ எனக்குத் தெரியாது.

யெப்தாவின் மகளைப் பாருங்கள், தகப்பன் வாழ வேண்டும், தகப்பன் தன் பொருத்தனையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே தன்னை ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்தது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று.

வாலிபர்களே! பிள்ளைகளே! உங்கள் சொந்தப் பெற்றோர்களுக்கு எல்லாவற்றிலும் கீழப்படியுங்கள், கர்த்தர் உங்கள் பேரில் பிரியமாய் இருப்பார்.

பெற்றோரைப் பார்த்து ஏன் என்று கேட்காதீர்கள், எதற்கு என்று கேட்காதீர்கள், முழுமனதுடன் மகிழ்ச்சியாய் கீழப்படியுங்கள்.

எனக்கு ஒரு ஊழியக்காரரைத் தெரியும், தான் வாழ்ந்த நாட்களில் உண்மையுடனும், விசுவாசத்துடனும் ஊழியம் செய்தவர். அவருக்கு ஒரே மகன். அந்த மகனால் அவர் அடிக்கடி கடும் வேதனைக்குள்ளானார்.

விசுவாசப் பாதையில் சில வேளைகளில் நெருக்கமும், இடுக்கமும், அவருக்கு வரும். அதை அவர் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார், சகித்தார் ஆனால் இந்த ஒரே மகன் யாரைக் கேட்டுக் கொண்டு ஊழியத்திற்கு வந்தாய், அதைவிட பிச்சை எடுக்கலாமே! என்று கொச்சையாக ஏசுவான்.

எனினும் அவர் அதை ஏற்றுக் கொண்டு சிரித்த முகமாய் வாழ்ந்து தனது ஓட்டத்தை முடித்தார். இன்றும் ''சிலுவை சுமந்து இயேசுவின் பின் சிரித்த முகமாய் சென்றிடுவோம்'' என்ற பாடலைப் பாடும்போது அந்த ஊழியரின் முகம் என் கண் முன்னால் நிற்கும்.

நடந்தது என்ன தெரியும்? கால கடிகாரம் சுழல ஆரம்பித்தது, தற்போது அந்த மகன் ஊழியத்திற்கு வந்து விட்டான், ஆனால் இதுவரைக்கும் நிலையாக நிற்கவோ, நிலையான இடத்தை பிடிக்கவோ அவனால் முடியவில்லை, அங்கீகரிக்க ஒருவரும் இல்லாமல், அரவணைக்க எவரும் இல்லாமல் அலசடிப்பட்டு அங்கலாய்த்துக் கொண்டு இருக்கிறான்.

நான் இதை எழுத காரணம் உண்டு, வாலிபர்களே! உங்கள் பெற்றோரின் மனதுக்கு துக்கமும், வேதனையும் உண்டாகும்படி பேசாதீர்கள், அல்லது வழிகளில் நடக்காதீர்கள் யெப்தாவின் பிள்ளையைப் போல் செத்தாலும் பெற்றோர் பெயரை காப்பாற்ற தீர்மானியுங்கள்

ஈசாக்குக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள் இருவருக்கும் ஒத்த வயது, ஆனால் திருமணக் காலம் வந்த போது, ஏசா தனது தகப்பனின் எண்ணம் - பிரியம் எது வென்று தெளிவாக அறிந்து பின்பும் ஏத்தியரின் குமாரத்திகளை மணமுடித்துக் கொளண்டான்.

ஆனால் யாக்கோபோ தனது தாய், தகப்பனின் விருப்பத்தின் படியே லாபானின் குமாரத்திகளை மணமுடித்தான்.

நடந்தது என்ன தெரியுமா? ஏசாவின் மனைவிகள், ஈசாக்கு - ரெபெக்காளுக்கு மனமடிவாக இருந்தார்கள் (ஆதி26:35) மட்டுமல்ல ஆதியாகமமம் 36:43 ஆம் வசனத்துடன் ஏசாவின் வம்ச வரலாறு முற்றுப் பெற்று விடுகிறது.

ஆனால் யாக்கோபின் மனைவிகள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டார்கள். இதை ரூத்தின் சரித்திரம் நான்காம்



அதிகாரம் பதினோராம் வசனத்தில் **உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப் போலவும் வாழ்த்திருக்கச் செய்வாராக** என்று எழுதப்பட்டிருப்பதின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்

மட்டுமல்ல யாக்கோபின் பிள்ளைகளையும் கர்த்தர் அங்கீகரித்து இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பிதாக்களாக மாற்றினார்.

வாலிபர்களே! உங்களது திருமணக் காரியத்தில் கூட நீங்கள் கவனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாட்டுக்கு நாடு கலாச்சார மாறுபாடு இருக்கலாம். ஆனால் வேதம் சொல்லும் பரிசுத்த வாழ்வும், கற்பும் எல்லா தேசத்திற்கும் பொதுவானதே.

நீங்கள் ஏசாவைப் போல மனமடிவை உண்டாக்கும் வழியில் செல்லாமல், பெற்றோரை திருப்பதி படுத்த - மகிழ்ச்சியாக்க தேவனுக்கு பிரியமான வழியில் நடவுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கைத் துணையும், உங்கள் பிள்ளைகளும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு இருப்பார்கள்.

இந்த அத்தியாத்தில் பிள்ளைகளுக்கே அதிகம் எழுதி விட்டேன். எனினும் பெற்றோர்களைக் குறித்து சில வார்த்தை எழுதுவதை தவிர்க்க நான் விரும்பவில்லை.

பெற்றோர்களே! நீங்கள் எப்படியோ? அப்படியே உங்கள் பிள்ளைகளும் இருப்பார்கள் இதை நீங்கள் மறந்து விடக் கூடாது

நீங்கள் தேவனுக்கு முன்பாக உண்மையாகவும் நேர்மையாகவும் இல்லாத பட்சத்தில் அதை உங்கள் பிள்ளைகளிடத்தில் எதிர்பார்ப்பது நியாயம் தானே? யோசித்துப் பாருங்கள்.

பிள்ளைகள் கர்ப்பத்தின் கனி என்று வேதம் சொல்கிறது. விதை ‘மா’ வாக இருந்தால் அந்த மரத்தில் மாங்கனியைத் தானே பெற முடியும். எனவே நீங்கள் எப்படியோ அப்படியே உங்கள் கனியும் (பிள்ளை) இருக்கும் என்பதை நினைவில் கொண்டு உங்கள் பிள்ளைகள் முன்பு யோக்கியமானவை களையே எப்போதும் செய்யுங்கள்.

யெப்தாவின் மகள் எடுத்த எடுப்பிலேயே சம்மதம் தெரிவித்து தனது தகப்பனை மகிழ்வித்ததற்கு காரணம் யெப்தாவின் முன் மாதிரியான நடக்கையே என்பது குறிப்பிடத் தக்கது. யெப்தாவின் வேத வைராக்கியம் அவன் மகளுக்குள் ஒரு சிறந்த அஸ்திபாரத்தை ஏற்படுத்தி விட்டது.

டாக்டராகிய என்து நண்பர் சொன்ன காரியம் ஒன்று இங்கு நினைவுக்கு வருகிறது. ஒருநாள் அவர் தூங்கியக் கொண்டு இருந்தபோது திடீர் என்று ‘‘சுரீல்’’ என்று தனது இடுப்பின் கீழ் குத்துவது போன்ற உணர்வு ஏற்படவே திடுக்கிட்டு விழித்துப் பார்த்தார்.

அவருக்கு மிகப்பெரிய அதிர்ச்சி மற்றும் ஆச்சரியம். அவரின் மூன்று வயது பையன் மருந்து போடும் ஊசியை (சிரஞ்சி) கொண்டு வந்து அப்பாவிற்கு ஊசி போட்டு விட்டு சிரிக்கிறான். இவரால் கோபப்பட முடியவில்லை.

இது ஒரு சாதாரண நிகழ்ச்சி தான், ஆனால் இதை சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த குழந்தை மிக நீண்ட நாட்களாக தனது தகப்பனை கவனித்து வந்துள்ளது. தகப்பன் மருந்து எடுப்பதையும் எப்படி, எங்கு குத்துகிறார் என்பதையும் மிக கூர்மையாக கவனித்து இருக்கிறது. சமயம் கிடைத்தவுடன் ஊசி போட்டு விட்டது.

பெற்றோர்களே! நமது பிள்ளைகளும் நம்மைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள், மறந்து விடாதீர்கள்.



அவர்கள் படிக்கும் முதல் புத்தகமே நமது அன்றாட வாழ்க்கைதான், நினைவில் வையுங்கள்.

தகப்பனுக்கு தப்பாத பிள்ளை என்று தலைப்பிட்டு இருக்கிற படியால் தகப்பனுக்கு மாத்திரமே பொறுப்பு நமக்கு இல்லை என்று தாய்மார்கள் எண்ணிவிடக்கூடாது. யெப்தாவின் சரித்திரத்தில் அவன் தாயைக் குறித்து தகப்பனைக் குறித்து மகளைக் குறித்து குறிப்புகள் உண்டு. ஆனால் அவரின் மனைவியைக் குறித்த எந்தக் குறிப்பும் கிடையாது.

ஆனால் யெப்தாவின் மனைவி எப்படிப்பட்டவள் என்பதை என்னால் கூற முடியும். தகப்பனுக்கு தப்பாமல் பிறந்த பிள்ளை என்ற பழமொழி உள்ளது போலவே தமிழில் மற்றுமொரு பழமொழி உண்டு. நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை என்பது நீங்கள் அறிந்ததே.

இதே வார்த்தையை நமது வேதத்திலும் காண முடியும். எசே 16:44ல் இதோ பழமொழி சொல்கிறவர்கள் எல்லோரும் தாயைப் போல மகள் என்று உன்னைக் குறித்து சொல்வார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த வசனங்களின் அடிப்படையில் யெப்தாவின் மகளைக் குறித்து எண்ணிப் பார்க்கிறேன். அவள் தகப்பனக்கு தப்பாத பிள்ளை மாத்திரமல்ல தாயைப் போல பிள்ளை என்றும் என் உள்ளம் சொல்கிறது.

யெப்தாவின் மனைவியிடத்தில் காணப்பட்ட நல்ல குணங்கள் அவன் மகளிடத்திலும் காணப்படடு இருக்கும் என்று நம்புகிறேன்.

பெற்றோர்களே! உங்கள் வாழ்க்கையின் பிரதி பலிப்பு உங்கள் பிள்ளைகளிடத்தில் விளங்கும் என்பதை மறந்து விடக் கூடாது.

தீமோத்தேயுவைக் குறித்து பவுல் எழுதுகிற போது அந்த விசுவாசம் முந்தி உன் தாய்க்குள்ளும் பாட்டிக்குள்ளும் இருந்தது என்று எழுதுகிறார். எனவே உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல மாதிரியை முன் வைத்து செல்லுங்கள்.

பிள்ளைகளே! மீண்டும் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். தகப்பனிடத்தில் ஆண்டவர் சொன்னதை நிறைவேற்ற தன்னையே ஒப்புக் கொடுத்தான் ஈசாக்கு ஆண்டவர் சொன்னதை நிறைவேற்ற தன்னையே ஒப்புக் கொடுத்தான் ஈசாக்கு ஆண்டவரிடத்தில் தகப்பன் சொன்னதை அப்படியே நிறைவேற்ற தன்னையே ஒப்புக் கொடுத்தாள் யெப்தாவின் மகள்.

இந்த இருவரும் வேதத்தில் முக்கிய இடத்தை பெற்றிருக்கிறார்கள். நீங்கள் அழியா பெயரையும் ஜீவனையும் பெற்றுக்கொள்ள அவர்களைப் போல் உங்கள் வாழ்வை பூரணமாய் ஒப்புக் கொடுங்கள்.

இறுதியாக

எனக்கான்பானவர்களே! இதுவரை நீங்கள் ஏழு அத்தியாங்களை இந்த நூலில் கடந்து வந்துள்ளீர்கள். எத்தனையோ பேர்கள் அவன் சம காலத்தில் வாழ்ந்திருந்தாலும் யெப்தாவின் பெயர் வேத புத்தகத்தில் விசுவாச வீரர் பட்டியலில் எழுதப்பட்டுள்ளதை சிந்தித்துப் பாருங்கள்.

சில பெயர்களை தேவன் தமது ஜீவ புஸ்தகத்தில் எழுதுவதில்லை. சில பெயர்களை தேவன் எழுதியிருந்தாலும் காலப் போக்கில் இவர்களின் செயல்பாடுகளை கண்டு



அவர்களின் பெயர்களை ஜீவ புஸ்தகத்தில் இராதபடிக்கு கிறுக்கிப் போட்டு விடுகிறார். சில பெயர்கள் அப்படியே ஜீவ புஸ்தகத்தில் நிலைத்து நிற்கிறது.

உங்கள் பெயரின் நிலை என்ன? உங்களைக் குறித்து தேவனின் ஜீவ புஸ்தகத்திலும் ஞாபக புஸ்தகத்திலும் என்ன எழுதப்பட்டு இருக்கும். ஆபேல் துவங்கி யோவான் ஸ்நானகன் முடிய புதிய ஏற்பாட்டில் பக்தர்களின் பெயர் அடங்கிய தேவனின் புஸ்தகத்தில் உங்கள் பெயர் இடம் பெறுவது முக்கியம்.

உங்கள் கிரியை தேவனுக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாக இருந்தால் தேவன் சில பக்தர்களை, என்தாசனாகிய தாவீது, என் சிநேகிதனாகிய ஆபிரகாம், உத்திமனாகிய யோபு, விசுவாச வீரனாகிய யெப்தா என்று குறிப்பிடுவது போல் உங்கள் கிரியைகளை நினைவு கூர்ந்து உங்களை பெயர் சொல்லி அழைப்பார்.

இதோ! யெப்தா

கர்த்தருக்குப் பிரியமானவன்

கர்த்தர்மேல் நம்பிக்கை உள்ளவன்

கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறவன்

கர்த்தரின் ஆவியை பெற்றவன்

கர்த்தருக்குப் பொருத்தனையை நிறைவேற்றியவன்

இதோ நீங்களும் இப்படியே உங்கள் வாழ்வை கர்த்தருக்குள் கட்டுங்கள் களி கூறுங்கள் - ஆமென்

## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**

**கேட்டு மகிழுங்கள் !**
**பார்த்து பயன்பெறுங்கள் !**

திருமறை அறிஞர் டாக்டர் அ. கிறிஸ்டோபர் அவர்கள் தனது சபையிலும், வெளியூர் கூட்டங்களிலும் ஆற்றுகிற அருள் உரைகளை அப்படியே (CD, VCD) குறுந்தட்டில் பதிவு செய்கிறோம். CD, VCD விவரங்களைப் பெற கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

இந்த ஒலி, ஒளி வழி ஊழியத்தின் மூலம் அநேக குடும்பங்கள் கட்டப்படுகின்றன. ஊழியர்கள் உற்சாகம் அடைகின்றனர். உங்கள் தேவைக்கு இப்பொழுதே தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன்
உன்னதரின் ஊடக ஊழியத்தில்
பாஸ்டர். **அலெக்ஸ் தினகரன்**

தொடர்பு முகவரி

**விண்ணக அப்பம்**

4/2, நேருவீதி சூரம்பட்டி,
ஈரோடு - 9. தென் இந்தியா.

தொலைபேசி எண்கள் :
0424 - 2277323, 0424 - 2271323

செல் போன் :
94434 - 99486, 94434 - 99487